
குங்குமச்
சிமிழ்
1-4-2012 ரூ 4.00
அழகின்
நிறம்
விக்கிரமன்

சிறுகதை

# மாய வாழ்க்கை

"மாகினி... ஒரு அரை டம்ளர் காபி போடு..." என்று அந்தக் காலை நேரத்தில் இரண்டாவது காபி கேட்ட கணவன் சந்தானவேலுவின் குரல் தனதருகே ஒலிப்பது கேட்டு மாகினி திடுக்கிட்டாள். வாஷ்பேசினில் குனிந்து ஏதோ செய்து கொண்டிருந்தவள் மிரட்சியுடன் திரும்பினாள். தான் செய்தது தனது கணவனுக்கு தெரிந்து விட்டதோ என்ற பயத்தில் அவள் முகம் வெளிறிப் போனது. நல்லவேளையாக சந்தானவேலு குரல் கொடுத்துவிட்டு புறக்கடைக்குச் சென்றுவிட்டதால், அவர் கவனிக்கவில்லை என்று எண்ணி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

சந்தானவேலு, ஐம்பது வயதை சில வருடங்களுக்கு முன் தாண்டிய தனியார் உத்யோகஸ்தர். புறக்கடையிலிருந்து திரும்பிய சந்தானவேலு, கூடத்தின் டீப்பாயின் மேலிருந்த ஆவி பறக்கும் காபியை எடுத்துப் பருகத் தொடங்கினார். கூடத்து சோபாவில் அவர் அம்மா அங்கமுத்து கம்பீரமாக அமர்ந்திருந்தாள். பளபளக்கும் அபூர்வா பட்டுச்சேலை, கைகளில் அடுக்கான கண்ணாடி

குடந்தை. ச.இராமசாமி



வளையல்கள், கழுத்தில் முகப்பு வைத்த கவரிங் சங்கிலி. அவரது அம்மா அங்கமுத்து எழுபது வயதில் அப்படி அமர்ந்திருப்பதைக் கண்டதும் அவருக்கு எரிச்சலாக இருந்தது. ஆனாலும் பொறுத்துக் கொண்டார். என்ன செய்வது? அவள் ஒரு ஹிஸ்டீரியா மன நோயாளி.

"குளிச்சிட்டியா? பள்ளிக்கூடத்துக்கு நேரமாகுது பாரு... சீக்கிரம் கிளம்பு..." அவரை விரட்டினாள் அங்கமுத்து. அவளைப் பொருத்த வரை அவர் இன்னும் பள்ளிக்குச் செல்லும் சிறுவன்தான். அவளது நினைவுகளும் சூழல்களும் நாற்பது வருடம் பின் தங்கியவை. அவள் அந்த நினைவிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவள். சில வருடங்களாகவே இந்த மன பாதிப்பு நிலவி வருகிறது. அவரும் அம்மாவை அழைத்துச் சென்று மன நல மருத்துவரிடம் காட்டி மாத்திரைகள் வாங்கிக் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறார்.

அவளது கேள்விக்கு அவர் பதில் சொல்லாததைக் கண்டு கோபத்துடன் "சீக்கிரம் கிளம்புன்னு சொல்கிறேன்..." என்று பல்லைக் கடித்தாள்.

"உங்கப்பா கோவிலுக்குக் கூட்டிக்கிட்டு போறேன்னு சொன்னவர்தான் ஆளைக் காணவில்லை..." என்று முகத்தை திருப்பிக் கொண்டாள்.

அவரது அப்பா இறந்து நாற்பது வருடங்கள் ஆகிவிட்டது.

காபி டம்ளரை எடுக்க வந்த மாகினியைப் பார்த்ததும், "ஏண்டீ... பத்மா... தட்டுல இரண்டு இட்லி வச்சிதானே கேட்டேன். பசியில வயிறு எரியுது..." என்று சிணுங்கினாள். அம்மாவைப் பொறுத்தவரை

## எனக்குப் பொருள் கிடைக்கவில்லை

**சென்**னையில் நடந்த ஒரு விழாவில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி பேசுகையில், "எல்லோடமும் பொருளைத் திரட்டித்தான் இந்த விழாவை நடத்துகிறார்கள். ஆனால், விழாவை நடத்துபவர்கள் என்னைப் பேச அழைத்த பின் இந்த நிமிடம் வரை, எனக்குப் பொருள் கிடைக்கவில்லை" என்று கூறினார்.

அவள் பத்மாதான். சந்தானவேலுவின் கிராமத்தில் பக்கத்து வீட்டுப் பெண். ஒரு காலத்தில் அம்மாவின் தோழி.

"இதோ எடுத்திட்டு வரேன் அத்தை..."

மாகினி சமையலறை சென்றுவிட்டாள். சாப்பாட்டு மேசையில் சந்தான வேலுவிற்கு சிற்றுண்டியை வைத்துவிட்டு, அங்கமுத்துவிடம் இட்லி தட்டைக் கொண்டு வந்து வைத்தாள் மாகினி.

"என்னடி இரு இட்லியை வைக்கிறே...? பொங்கல் இருந்துதே என்னாச்சு...?"

"நீங்க பொங்கல் வேணாம்னு சொல்லி நாய்க்கு போடச் சொன்னீங்களே, மறந்துட்டீங்களா?"

மாகினிக்கு தெரியும் அங்கமுத்துவை எப்படி சமாளிப்பது என்று.

அங்கமுத்து ஏதோ முணுமுத்தபடி இட்லியை எடுத்து சாப்பிட ஆரம்பித்தாள்.

"நானும் என் வீட்டுக்காரரும் கோவிலுக்குப் போகிறோம். மதியம் சாப்பாட்டுக்குதான் வருவோம். இட்லி மீதி இருந்தா எடுத்து வை. மனுசன் இட்லின்னா ஆசையா சாப்பிடுவாரு..." என்று ஜன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்த்தபடி சாப்பிட்டாள் அங்கமுத்து.

"மாகினி... இவ்வளவு நாட்களா சிகிச்சை கொடுக்கிறோம். ஒன்றும் முன்னேற்றமில்லையே..." என்று கவலை தோய்ந்த குரலில் சொன்னார் சந்தானவேலு.

உடனே, விழாக்குழுவினர் சார்பாக ஒருவர் ஓடி வந்து, ஒலி பெருக்கியில் "விழா முடிந்ததும் அவரிடம் காசோலை(செக்) கொடுத்து விடுகிறோம்" என்று அறிவித்தார்.

ம.பொ.சி உடனே சிரித்துக் கொண்டே, "நான் அந்தப் பொருளைப் பற்றிச் சொல்லவில்லை. எனக்கு இதுவரை எந்த விஷயத்தைப் பற்றி பேசுவது என்பதையே சிலேடையாகக் கூறினேன்" என்றார்.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி

"ஆமாம். ஆனா வியாதி மேலே முற்றாமல் இந்த மட்டிலாவது இருக்கிறதே.." என்று பெருமூச்சு விட்டாள்.

அவள் சொன்னதைக் கேட்டு சந்தானவேலுவிற்கும் சிறிது ஆறுதல் வந்தது. அம்மாவால் தொல்லை ஏதும் கிடையாது. அவள் ஒரு தனி உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பாள். மறைந்து போன கணவருடனும், சிறுவன் சந்தானவேலுடனும், பத்மா என்கிற மாகினியுடனும் அவளது வாழ்க்கை. அவளது மண வாழ்க்கை ஐந்து வருடம் தான் நீடித்தது. மீதி வாழ்க்கையை சந்தானவேலுவைப் படிக்க வைப்பதிலும், கிராமத்தில் இருந்த அவர்களது நிலத்தில் விவசாயம் பார்ப்பதிலும், மாடு, ஆடு, கோழிகளுடனும் கழித்து விட்டாள்.

இரவு. அரைத்தூக்கத்திலிருந்த சந்தானவேலு "யாரது" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டு கண் விழித்தார். அம்மா தான் அவ்வளவு அதிகாரமாக கத்தினாள். படுக்கையறையிலிருந்து எழுந்து கூடத்திற்கு வந்தார். அம்மா சுவற்றில் சாய்ந்து கொண்டு காலை நீட்டி அமர்ந்திருந்தாள்.

"யாரும்மா?" அரை தூக்கத்தில் கேட்டார்.

"தெரியலை... வாசலில் சத்தம் கேட்டது..." அவளது கண்களில் கொஞ்சம் கூட உறக்கமில்லை.

வாசல் கதவைத் திறந்து பார்த்தார். தெருவில் ஒரு நாய் பிளாஸ்டிக் பாட்டிலை கடித்து விளையாடிக் கொண்டிருந்தது. வேறு யாருமில்லை. சலிப்புடன் மீண்டும் கதவை சாத்திவிட்டு, "நீ இன்னும் தூங்கலையா?"

"இல்லை... இன்னிக்கு தூக்கமே வரவில்லை." காலை ஆட்டிக் கொண்டே சொன்னாள்.

"தூக்கம் வரும்போது தூங்கு... போ..." என்று உள்ளே சென்று படுத்துவிட்டார்.

**கா**லை எழுந்து வந்து பார்த்தார். அம்மா இரவு உட்கார்ந்து இருந்த நிலையிலேயே தூங்கிக் கொண்டிருந்தாள்.

"அம்மா.. ஏன் உட்கார்ந்துகிட்டு தூங்குகிறாய்... படுத்துத் தூங்க

வேண்டியதுதானே..." என்று அவளை எழுப்பினார்.

படக்கென்று கண் விழித்தவள் "விடிஞ்சிருச்சா...?" என்று சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு "இராத்திரி நல்லா தூங்கிட்டு இருந்தேன்... நீ வந்து எழுப்பியதும் தூக்கம் போனது தான். அதன்பின் தூக்கமே வரவில்லை. அப்புறம் உங்கப்பாவும் நானும் ரொம்ப நேரம் பேசிக்கிட்டு இருந்தோம். காலையிலதான் காபி குடிக்க கடைக்குப் போனார்" என்று அவிழ்ந்து கிடந்த தனது கூந்தலை வாரி கொண்டை போட்டபடி எழுந்தாள்.

சந்தானவேலு தலையில் அடித்துக் கொண்டு சிரித்தார்.

"சரி... சரி.. நீ பள்ளிக்கூடத்துக்கு கிளம்பு... நான் குளித்துவிட்டு வருகிறேன்.." என்று புறக்கடைக்குச் சென்றுவிட்டாள்.

சந்தானவேலு அலுவலகத்திற்கு கிளம்பி முடித்து சிற்றுண்டிக்குத் தயாரானார். கை கழுவ வாஷ்பேசினுக்குச் சென்றவர் அங்கு மாகினி ஏதோ செய்து கொண்டிருப்பதைக் கண்டதும் எட்டிப் பார்த்தார். மறுநொடி அவருக்கு கோபம் தலைக்கேறிவிட்டது. மாகினி பயத்தில் உறைந்து போய் நின்றாள்.

"ஏன்டீ. பைத்தியக்காரி...! நான் அம்மாவுக்கு சீக்கிரமா குணமாகனும் என்று மாத்திரை வாங்கிக் கொடுத்தா.. அதை நீ வாஷ் பேசின்ல கொட்டுகிறாயா?" என்று பளாரென்று அவளை அறைந்தார்.

அவர் அறைந்த வேகத்தில் சுவற்றில் முட்டிக் கொண்டு மாகினி மயங்கி விழுந்தாள். சந்தானவேலு மிரண்டு போய் தண்ணீரை அவள் முகத்திலடித்து மயக்கம் தெளியவைத்தார். அவள் மயக்கம் தெளிந்து கண் விழித்ததும் அவருக்கு தைரியம் வந்துவிட்டது. "உனக்கு என்ன அவ்வளவு திமிரா...?" என்று மீண்டும் கையை ஓங்கினார்.

மாகினி அவர் காலைக் கட்டிக் கொண்டு 'ஓ' வென்று அழத் தொடங்கிவிட்டாள். "ஒரு நொடி நான் சொல்வதைக் கேட்டு விட்டு அடியுங்கள்."

"என்னடீ... சொல்லப்போறே...? என் அம்மா பைத்தியம் முற்றி தெரு தெருவா அலைய வேண்டும் என்று தானே உன் திட்டம்... உன்கூட

## கிரகடோவா

எரிமலைகள் தோன்றுவதற்கு நிலம்தான் ஏற்றது என்பதில்லை. அவை கடலிலும் தோன்றுகின்றன. 1883–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27–ம் தேதி இந்தோனேஷியாவில் உள்ள ஜலசந்தியில் கிரகடோவா என்ற எரிமலை வெடித்துது மிகவும் பயங்கரமானதாகக் குறிப்பிடப்படுகிறது.

அப்போது எரிமலை வாயிலிருந்து வெளியே வந்து விழுந்த கற்குழம்பு... சுமார் 55 கிலோமீட்டர் உயரத்திற்கு மேலே சென்று வந்து விழுந்திருக்கிறது.

இத்தனை வருடம் குடும்பம் நடத்தியதே கேவலம்டீ"

"இல்லை...நீங்க நினைக்கிறது இல்லை. அவங்க மேல பரிதாபப்பட்டு தான் அப்படி செஞ்சேன். உங்கள் கண்ணுக்கு வேண்டுமானால் அம்மாவை பார்த்தால் அரைப் பைத்தியம் மாதிரி தெரியலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை அவர்கள் சந்தோஷமா வாழ்ந்துகிட்டு இருக்காங்க." என்று விசும்பினாள்.

"என்னடீ... புதுக்கதை விடுகிறாய்?" ஆத்திரத்துடன் வெடித்தான் சந்தானவேலு.

"உண்மைதாங்க. அவங்க மனசு உங்களுக்குப் புரியாது. நான் திருமணமாகி வந்த இத்தனை வருடங்களில் இப்பொழுது தான் அவர்கள் சந்தோஷமாக பேசுவதையும், தன்னை அலங்கரித்துக் கொள்வதையும் பார்க்கிறேன். இத்தனை காலம் அவர்கள் ஒப்புக்குத்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது... அவர்கள் மனம் படி வாழ்கிறார்கள். தனது கணவனுடன் பேசுகிறார்கள். அவருடன் கோவிலுக்குப் போகிறார்கள். என்னை பத்மா என்று நினைத்துக் கொண்டு எவ்வளவு கதை சொல்கிறார்கள் தெரியுமா? உங்களுக்கு எனக்கும்தான் அவரது வாழ்க்கை பொய்யாகத் தோன்றும். ஆனால் அவர்களைப் பொறுத்தவரை அது நிஜம். உங்கள் அப்பா இறந்து நாற்பது வருடங்களாக ஏக்கமும் நிராசையுமாக கழிந்த அவர்களது வாழ்க்கை இப்பொழுது சந்தோஷமும் குதூகலமுமாக கழிந்து கொண்டிருக்கிறது. அந்த நிஜத்தை கலைக்க எனக்கு மனசு வரைவில்லை. அவர்களுக்கும் எழுபது வயது ஆகிவிட்டது. இருக்கும் காலம் மட்டும் சந்தோஷமாக இருந்துவிட்டுப் போகட்டுமே..." என்று தலையிலடித்துக் கொண்டு அழுதாள்.

அந்த எரிமலையிலிருந்து வெளிவந்த சாம்பல்கள் 5330 கிலோமீட்டர் தொலைவு வரை சென்று விழுந்திருக்கின்றன.

எரிமலை வெடிக்கும்போது ஏற்பட்ட சத்தமானது 5000 கிலோ மீட்டர்களுக்கு அப்பாலும் கேட்டிருக்கிறது.

அதனால் 163 கிராமங்கள் அழிந்தன. சுமார் 50,000 மக்களும் அழிந்து போனார்கள்.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி

"என்ன இது பைத்தியக்காரத்தனமா சொல்கிறாய்...? அவர்களது வியாதி முற்றினால் என்ன நடக்கும் என்று சிந்தித்துப் பார்த்தாயா?" அவரது குரலில் இன்னும் கோபம் அடங்கவில்லை.

"நான் சுத்தமாக மாத்திரை கொடுக்காமல் இல்லை. அவர்களது மனநிலையை கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அதற்கு ஏற்றபடி மாத்திரை கொடுத்துவிடுவேன்."

"ஓஹோ.... நீயே டாக்டராயிட்டியா?" என்று மீண்டும் கையை ஓங்கினார்.

ஆனால் ஓங்கிய கை இறங்கவில்லை. ஒரு இரும்புக்கரம் அவரது கையை தடுத்துப் பிடித்தது. அம்மாதான் அவ்வளவு ஆக்ரோஷமாக பிடித்தாள். அவளது பிடியின் வலிமையைக் கண்டு அசந்து போய் நின்றார்.

"ஏண்டா ராஸ்கோல்... பள்ளிக்கூடத்துக்கு போகச் சொன்னால் இங்கே வந்து சண்டையா போடுகிறாய்? விசிறி மட்டை பிய்ந்து போய்விடும். ஒழுங்காக நடந்துக் கொள்" என்று அவரை எச்சரித்துவிட்டு.

"நீ ஏன்டி பத்மா அழுகிறாய்? நான் மிரட்டி விட்டேனே... நீ என் கூட வா... என் வீட்டுக்காரர் நேற்று என்னை எங்கெல்லாம் அழைத்துச் சென்றார் என்று சொல்கிறேன். எவ்வளவு சந்தோஷமாயிருந்தது தெரியுமா?" என்று மாகினியின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

அப்பொழுதுதான் அம்மாவின் முகத்தை நன்றாகக் கவனித்தார் சந்தானவேலு. அவள் முகத்தில் அவ்வளவு சந்தோஷம்...!

***

முழு நாவல்

# அழகின் நிறம்



‘என் அழகைக் காண இரு கண்கள் போதாதே’ – என்ற பாடலின் பல்லவியை மெத்தைப்படி ஏறும்போது தொடங்கினான் சந்துரு. பாடலை வாய் பாட, அவன் விழிகள் கூடத்துப் பக்கம் ஒருமுறை வட்டமிட்டன.

சொல்லி வைத்தாற் போல் ஞானமும் துணி துவைப்பதற்காகத் துணிகளைச் சேர்த்து எடுத்துக் கொண்டு கூடத்து அறைக் கதவைத்

## விக்கிரமன்



தாளிட்டுக் கொண்டு புறப்பட்டாள். தினமும் அப்படித்தான். ஏதாவது ஒரு பாட்டு. 'நல்ல சாரீரம், கிராமபோன் ரிக்கார்டில் உள்ளது போலவே பாடுகிறாரே' என்று அவள் எண்ணிக் கொள்வாள். ஒரு கணம் இருவர் கண்களும் சந்திக்கும். பிறகு என்ன தோன்றுமோ என்னவோ விடுவிடுவென்று கிணற்றடிக்குச் சென்று விடுவாள்.

ஆனால், சந்துரு பல்லவி, அநுபல்லவி சரணங்கள் முழுவதையும் மாடியில் தன் அறைக்குச் சென்றுப் பாடி முடித்து விடுவான். கையிலே வாசனை எண்ணெய் எடுத்துத் தேய்த்துத் தலையைக் கோதி விட்டு, சீப்பை எடுத்துப் படியப் படிய வாரி அதிலே சுருள சுருளாக ஜாலங்கள் ஏற்பட வைத்து, கண்ணாடியில் அந்த அழகை இரண்டு மூன்று தடவைப் பார்த்து, இப்படியும் அப்படியுமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு சிகை அலங்காரம் சரியாக அமைந்துவிட்டது என்ற திருப்தி ஏற்படும் வரையில் விடமாட்டான்.

அதுவரையில் படிக்கட்டுகளில் ஏறத் தொடங்கியபோது ஆரம்பித்த பாடல் நிற்காது. பிறகு பவுடர் எல்லாம் அப்பிக் கொண்டு டெர்லின் ஷர்ட்டை எடுத்து அணிந்து மீண்டும் ஒரு முறை கண்ணாடியில் பார்த்துக் கொள்வான். அப்பொழுதும் பாடல் இழைந்து ஒலிக்கும். பாடலில் பொருளுக்கேற்ப முகம் குழையும். முகபாவங்கள் பலவிதமாக மாறுவதை அவனே பார்த்து ரசித்துக் கொள்வான். தோள்பட்டையை இரண்டு முறை தூக்கிவிட்டுக் கொள்வதும், உடம்பைக் குலுக்கிவிட்டுக் கொள்வதும் , ஷர்ட்டின் மேல் ஏதோ ஒரு டன் தூசி படிந்திருப்பதைப் போல் டவலால் தட்டிக் கொள்வதுமாக அரைமணி நேரம் கழித்துவிடும். பிறகு கையில் பர்ஸை எடுத்துக் கொண்டு – பாக்கெட்தான் கிடையாதே – கதவை இழுத்துத் தாளிட்டுப் பூட்டும் வரை அந்தப் பாடல் அவன் கண்டத்தினின்று ஒலித்துக் கொண்டிருக்கும்.

படிக்கட்டுகளில் அவன் இறங்கிவரும் ஒய்யாரமே அலாதிதான்.



ஒரு கையில் பர்ஸும் மற்றொரு கையில் எவர்ஸில்வர் டபராவும் இருக்கும். அதைக் கூடத்து ஊஞ்சல் பலகை மீது வைத்துவிட்டுச் சற்று நிற்பான். மாலை நான்கு மணிக்கு வரும் பால்காரனிடம் அந்தப் பாத்திரத்தில் பால் வாங்குவதற்குத்தான் அது. ஊஞ்சல் பலகையின் மீதிருப்பதை ஞானம் எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் செல்வான்.

மூஸ் (Moosa) என வட அமெரிக்காவிலும், எல்க் என ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அழைக்கப்படும் பெரிய மான்கள் 1400 பவுண்டு எடை வரை வளரக்கூடியவை. இவை மணிக்கு 35 மைல் வரை ஓடவும், 20 அடி ஆழ தண்ணீரில் மணிக்கு 6 மைல் நீந்தவும் ஆற்றல் படைத்தவை. தொடர்ந்து 15 மைல் தரையில் ஓடவும், நீரில் தொடர்ந்து 10 மைல்கள் நீந்தவும் கூடியவை. இதனுடைய கர்ப்ப காலம் 230 நாட்கள். 75 சதவீத பிறப்புகள் இரட்டையாக அமைகின்றன. அலாஸ்காவில் மூஸ்கள் விரும்பி வேட்டையாடப்படுகின்றன.

- க.ரவீந்திரன்

அவன் மேல்மாடி அறைக்குக் குடித்தனம் வந்த ஓரிரு தினங்கள் வரையில் அவளும் திரும்பிப்பார்க்காமலேயே பாத்திரத்தை எடுத்துச் செல்வாள். அவனும் திரும்பிப் பார்க்காமலேயே நாணமுற்றவன் போல் போய்விடுவான்.

பிறகு ஒருநாள் அவன் பாத்திரத்தை வைத்துவிட்டுத் தயங்கி நின்றான். அவளும் பாத்திரத்தை உள்ளே எடுத்துச் சென்று வைத்துவிட்டு அவன் போயிருப்பான் என்ற எண்ணத்தில் திரும்பி வந்தாள். மறுபடியும் உள்ளே போனாள். திரும்பி வந்தாள். சந்துரு நின்று கொண்டிருந்தான். அவன் எதற்கு நிற்கிறான் என்று அவள் எப்படிக் கேட்பாள்? இயற்கையான நாணமா? அச்சமா?

நல்ல வேளையாகக் கோயிலிலிருந்து ஏதோ காரியமாக வீட்டிற்கு வந்த குமாரசாமி குருக்கள், "ஆபீசுக்குப் புறப்பட்டாச்சா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார். அவர்தான் அந்த வீடு முழுவதையும் வாடகைக்கு எடுத்திருந்தார். கோயில் வீடு அது. கோயிலுக்கு அருகே தான் வீடு. கோபுர வாசலை நெருங்கித் தர்மகர்த்தா வீடு. அதற்கு அடுத்தது ஓய்வு பெற்ற தாசில்தார் வீடு. அதற்கு அடுத்தது 'குருக்கள் வீடு' என்று பெயர் சூட்டப் பெற்ற குமாரசாமியின் வீடு.

அந்த வசதிகூட செய்துத் தந்திராவிடில் குமாரசாமி அந்த இரண்டுங்கெட்டான் ஊரில் நிலைத்து நின்றிருக்க மாட்டார். சீர்காழியோ, வைத்தீஸ்வரன் கோயிலோ என்று போய் பிழைத்துக்

## உலகின் குள்ளமான மனிதர்

**ப**கதூர் டாங்கி. வயது 72. உலகிலேயே குள்ளமான மனிதராகக் கண்டறியப்பட்டுள்ள இவர் நேபாள நாட்டைச் சேர்ந்தவர். இவரது உயரம் 22 அங்குலம். அதாவது 56 சென்டிமீட்டர். உலகின் குள்ளமான மனிதர்

கொள்ளக்கூடிய திறமை அவரிடம் இருந்தது. வயது அப்படியொன்றும் ஆகிவிடவில்லை. கட்டுக் குடுமியும், கழுத்தில் உருத்திராட்சமும் திகழ மந்திரங்களைக் கணீர் என்று அவர் சொல்லும் அழகே அழகு. எல்லாம் சுந்தரேசக் குருக்களிடம் பழக்கப்பட்டதால் வந்த திறமை. எல்லாவற்றிற்கும் அவர் தான் குரு. குருவுக்கு ஏற்ற சிஷ்யன் என்று எல்லாரும் வேடிக்கையாகக் கூறுவார்கள். அவர்கள் இருவர் தோற்றத்தையும் பார்த்து, கரிய மேனி, பளிச்சென்று நெற்றியில் துலங்கும் விபூதி. நடுவே சந்தனப் பொட்டு. கழுத்திலே தங்கப் பூணிட்ட உத்திராக்கம். எப்போதும் சிரித்த முகம். வெள்ளை வெளேரென்ற பற்கள் கருமையை மேலும் அதிகம் எடுத்துக் காட்டின.

"ஒன்றுமில்லை; இன்று நான் ராத்திரி வருவதற்கு லேட்டாகும். பாலை வாங்கிக் காய்ச்சித் தயிர் ஆக்கிட்டா சரிதான். அதற்குத்தான்" என்று சந்துரு முகத்தில் அசட்டுக் களை வழியக் கூறினான்.

"அதற்கென்ன பேஷாப் போச்சு! கட்டித் தயிர் தோய்ச்சுச் சாப்பாட்டையும் நம்ப கிருஹத்திலேயே நாளைக்கு வச்சுண்டா போச்சு!" என்று சொல்லிக் கொண்டே ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்த குமாரசாமி குருக்கள், மேல் துணியில் மூடிக் கொண்டு வந்த சக்கரைப் பொங்கலை எடுத்து,

"அடியே ஞானம்! சார்வாளுக்கும் ஒரு எலையிலே வைத்துச் சாமி பிரசாதத்தைக் கொடுடி. சார்வாள் நம்ப பக்கம்தான். இந்த ஊருக்கு மாற்றி வந்திருக்காள்" என்று தன் மனைவியின் சங்கோஜத்தை மாற்றி,

என்ற சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற இருக்கிறார். இதுவரை இந்த சாதனையை தக்க வைத்து இருந்தவா் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜன்சே பாலாவிங் என்பவர். இவரது உயரம் 23-5 அங்குலம். அதாவது 60 சென்டிமீட்டர்.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி

சந்துருவையும் சற்று அந்தக் குடும்பத்துக்குள் நுழையக் கொடியேற்றம் செய்தார்.

சந்துவுக்கு, குமாரசாமி குருக்களின் ஊரான திருவெண்காடுதான் தனக்கும் சொந்த ஊர் என்று அவர் சொல்லித்தான் தெரியும். அவன் படித்துப் பாஸ் செய்ததெல்லாம் சிதம்பரம்தான். விவசாய டெமான்ஸ்டிரேடர் ஆபிசுலே வேலை கிடைத்துச் சிறிது நாளில் அவனைத் தேவிபுரத்துக்கு மாற்றிவிட்டனர். தேவிபுரத்தில் அப்படியொன்றும் பிரமாதமான 'போர்டிங் லாட்ஜிங்' ஹோட்டல் ஏதும் கிடையாது. பிரமாதமானது என்றா சொன்னேன்... பெயருக்கும் ஒன்றுகூடக் கிடையாது. நாயர் டீ ஓட்டலையும் பட்டு அய்யர் நடத்தும் சுந்தர பவான் காபி கிளப்பையும் தவிர வயிற்றுக்கு 'ஈயும்' இடம் ஏதுமிவில்லை.

அந்த ஊருக்கு வந்தவுடன் சந்துருவுக்கு அது ஒரு பெரிய பிரச்னையாகப் போய்விட்டது. எப்படியோ சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்து கொண்டான். ஆனால் தங்குவதற்கு இடம்? அப்போதுதான் குமாரசாமி அறிமுகமானார். சாயுங்கால பூஜை வேளையில் சுவாமி தரிசனத்திற்காகச் சென்ற சந்துருவிடம் பேச்சுக் கொடுத்து அவனைப் பற்றித் தெரிந்துகொண்டார். அவனுடைய வாளிப்பான தோற்றமும் சிவந்த மேனியும், அதற்கு உதவி செய்வது போல் நெளிந்துச் சுருண்ட கிராப்பும், அலங்கிக் கலங்காத ஆடையும் அவனுடன் அவரைச் சற்றுப் பேசச் செய்தன.

குமாரசாமிக்கும், சந்துருவுக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான் இருக்கும். திருவெண்காட்டில் சிறுவயதில் இருவரும் கோயில் பிராகாரத்தில் ஓடிப் பிடித்து விளையாடியதை அவனுக்கு நினைவூட்ட முயன்றார் குமாரசாமி. சந்துருவுக்குப் பழைய நினைவு வரவில்லை என்றாலும் அவர் வீட்டு மாடியில் இடம் பெறுவதற்காகத் தலையை ஆட்டி வைத்தான். தன் வீட்டு மாடி அறை உபயோகப்




மரங்கொத்திகளில் 37 வகைகள் உள்ளன. இவைகள் 20 ஆண்டுகாலம் வரை வாழக்கூடியவை. மரங்கொத்தி இயற்கையான மரப்பொந்திலோ உலர்ந்த மரத்தைக் குடைந்து பொந்து செய்து கொண்டோ அதில் கூடு கட்டும். கூட்டினுள் உளுத்த மரத்தூள் பரப்பியிருக்கும். மரத்தின் மீது மரங்கொத்தி அலகால் தாக்கும் ஒலி காட்டின் நிசப்தத்தில் நெடுந்தூரம் கேட்கும். கால்கள் வால் இவற்றின் அமைப்பு காரணமாகவே மரங்கொத்தி அடி மரத்தின் மீது மிக உறுதியாகப் பற்றி அமர முடிகிறது. தெற்கு மெக்ஸிகோ, மத்திய மற்றும் தெற்கு அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதிகளில் வண்ண மரங்கொத்திகளை அதிகம் காணலாம்.

- க.ரவீந்திரன்

படுத்தாமல் இருப்பதை அவனுக்கு வாடகைக்கு விட்டால் என்ன என்ற எண்ணம் குருக்களுக்குத் தோன்றியது.

சந்துரு பெட்டிப் படுக்கைகளுடன் அங்கே குடியேறிவிட்டான். அவனுக்கு அந்த வீடு மிகவும் பிடித்திருந்தது. மாடியிலேயே வசதியாக எல்லாச் சௌகரியங்களும்



பீகார் மாநிலம் சாஸராம் என்ற இடத்தில் அமைந்துள்ள ஷேர்ஷாவின் கல்லறை. 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.
- க.ரவீந்திரன்

அமைந்திருந்தன. இரவு படுத்துத் தூங்குவதற்கு மட்டும் முதலில் பயன்பட்டது அந்த அறை. மீதி நேரத்தில் அவன் வெளியே தான் சுற்றிக் கொண்டிருப்பான்.

“ஸார்வாள், எங்கே சாயங்காலம் ஆட்டத்திற்குச் சினிமாவுக்குப் போக போராப் போல இருக்கு” என்று குமாரசாமி ஓர் வாய்ச் சக்கரைப் பொங்கலை வாயில் போட்டுக் கொண்டே கேட்டார். சந்துரு பல்லை இளித்தான்.

இப்போது ஞானம் சமையல் உள்ளிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தாள். சந்துரு போய்விட்ட பிறகு, ஞானம் ஊஞ்சல் பலகை அருகே வந்து சங்கிலியைப் பிடித்துக் கொண்டு, ‘புதுப்படம் இப்போ

வடுகநாதன்லே ஓடறாப்பலே இருக்கு" என்றாள்.

குளித்துவிட்டுத் தலையை முடிந்து கொண்டிருந்தாள். பொன் நிற மேனிக்கு மேலும் அழகு செய்வதுபோல் மஞ்சள் பூசியிருந்தாள். அகலமான குங்குமப் பொட்டு அவள் முகத்தை மற்றொரு முறை பார்க்க வேண்டும் எனும் எண்ணத்தை ஏற்படுத்தியது. இன்னும் முகத்துக்குப் பவுடர், விழிக்கு மை இவையெல்லாம் சேரவில்லை. குமாரசாமியின் கண்களில் அவையொன்றும் படவில்லை.

"உனக்குச் சினிமா பார்க்க ஆசையா?" என்று குமாரசாமி கேட்டு விடவில்லை.

அந்த எண்ணமே அவருக்குத் தோன்றவில்லை. தோன்றுவதுமில்லை.

கோழி கூவுவதற்கும் முன்பு எழுந்து குளத்தில் நீராடிவிட்டு கோவிலுக்குள் நுழைந்தால் ஏழுமணிக்குள் அந்தக் கோயில் வேலையை முடித்துக் கொண்டு அங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள முருகர் கோவிலுக்குப் பூசை செய்யச் சென்றுத் திரும்பப் பத்துமணி ஆகிவிடும். அற்ப ஆகாரம் எல்லாம் அங்குதான். பிறகு அங்கிருந்துப் புறப்பட்டு உச்சிக்கால பூஜையும் சிவன் கோயிலில் முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்த பிறகுதான் சற்று ஓய்வு.

ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக்கொண்டே ஞானத்திடம்

### முயற்சி

இளைஞனே...
முயற்சிக்கும்
பச்சை விளக்கு காட்டு...
முன்னேற்றம் உனக்குச்
சிவப்புக் கம்பளம் விரிக்கும்...!

### முரண்

தருமனைக் கண்டிட
நீதியின் கதவைத்
தட்டினேன்...
குதூகலத்துடன் திறந்தான்
துச்சாதனன்...

- குடந்தை பாலு

## அதிசயச் செடி

**ஜா**டிச் செடி என்பது சிறுசிறு பூச்சிகளைப் பிடித்து உட்கொள்ளும் ஒரு வகையான அதிசயச் செடி. இதனுடைய இலைகள் ஜாடி போல அமைந்திருக்கும். இதன் காரணமாக இதற்கு ஜாடிச் செடி என்று பெயர்

அவர் பேசுவதெல்லாம் அன்று காலையில் வந்த சேவார்த்திகளைப் பற்றியும் அவர்கள் கொடுத்த தட்சிணையைப் பற்றியும்தான் இருக்கும்.

அவருக்கு வடுகநாதனில் வள்ளிக் கணவன் என்ற சினிமா ஆடினால் என்ன, 'வாழ்க்கை' ஓடினால்தான் என்ன? அவருடைய நினைவு எல்லாம் அடுத்த பிரதோஷத்தைப் பற்றியும், உற்சவங்களைப் பற்றியும்தான்.

**ச**ந்துரு இரவு வீட்டிற்கு வரும்போது மணி பதினொன்று இருக்கும். வீட்டிற்குள்ளே நடுக்கூடத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

சிறிது நேரம் தட்டியபிறகே கதவு திறக்கப்பட்டது. அகால வேளையில் இப்படித் தொந்தரவு செய்கிறோமே என்ற கவலையிருந்தது அவனுக்கு. ஞானம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு கதவைத் திறக்கத் தட்டுத் தடுமாறி வந்தாள். கையில் விளக்கு இருந்தது.

"என்ன இன்று இவ்வளவு நேரமாக்கி விட்டீர்களே!" என்று அவள் கொட்டாவி விட்டுக் கொண்டே கேட்டாள். திடீரென்று

ஏற்பட்டது. இந்த ஜாடி இலைகளுக்குள் ஒரு வகை அமிலம் உள்ளது. அமிலத்தைத் தேன் என்று நினைத்து அதைக் குடிக்க வரும் பூச்சிகள் அமிலத்தில் விழுந்து இறந்து போகின்றன. ஜாடிச்செடி இந்தப் பூச்சிகளைச் செரித்து கிரகித்துக் கொள்கிறது.

**- முக்கிமலை நஞ்சன், நீலகிரி**

அவள் எழுந்து வந்தாலும், கண்ணில் தூக்கத்தின் தழுவல் பலமாக இருந்தாலும், கேசம் நெற்றியில் தவழ்ந்து ஊஞ்சலாடினாலும், தலையில் குடியிருந்த மல்லிகை மலர் அவிழ்ந்துத் தோளில் புரண்டாலும், அவள் கையிலிருந்த விளக்கின் ஒளியில் அவள் அழகு மேலும் பிரகாசித்தது. மாம்பழ முகத்தின் கருவண்டு விழிகளின் அடியில் ஒரு கரு அரைவட்டமிருந்தது கூட அவள் முக அரவிந்தத்தின் அழகை மேலும் அதிகப்படுத்தியது.

‘என்ன இவ்வளவு நேரமாக்கி விட்டீர்களே...’ இப்படி யார் கேட்கிறார்கள்?


ஞானம். இதுவரையில் தன்னுடன் ஒரு வார்த்தைக்கூட பேசாதவள்.

சந்துருவின் உடல் புல்லரித்தது. தோளை ஒரு முறை குலுக்கிக் கொண்டான். இரவு தாமதமாக வருவதாகச் சொல்லிவிட்டுத் தானே சென்றோம். பாவம்; தூக்கக் கலக்கம். அல்லது ஏகாந்தமான வேளையில் சமய சந்தர்ப்பம் தெரியாது வந்து எழுப்பியதால் ஏற்பட்ட களைப்பால் கூட அவள் அப்படிக் கேட்டிருக்கலாம். பாவம், குமாரசாமி குருக்கள்... அதிகாலையில் எழுந்தவர் அயர்ந்துத் தூங்கிக் கொண்டிருப்பார்; கதவைத் திறக்க இந்தப் பூங்கொடியன்றோ நடந்துப் படர்ந்து வரவேண்டியிருக்கிறது. இரவு தாமதமாக வீடு திரும்பினால் பெண்கள் இப்படித் தான் சலித்துக் கொள்வார்களோ? அவனுக்குத் திடீரென்று சிரிப்பு வந்தது.

சிதம்பரத்தில் கல்லூரியில் அவன் படித்துக் கொண்டிருந்த காலத்தில் அக்காவின் வீட்டில் தங்கியிருந்தான். சுதந்திரம் அதிகம். நண்பர்களோடு நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்து விட்டு வீட்டுக்குத் திரும்பும் போது இரவு நேரமாகி விடும். ஒவ்வொரு நாளும் சகோதரி கண்விழித்துக் கொண்டிருந்து,

“சந்துரு, இப்படித் தாமதமாக வருகிறாயே, நாளைக்கு உன் பெண்டாட்டி இப்படிக் கண் விழித்திருந்துச் சோறுபோடப் போகிறாளா? கதவைக் கூடத் திறக்கமாட்டாள்” என்று செல்லமாகக் கூறிக் கடிந்து கொள்வாள்.

அந்த நினைவு அவனுக்கு இப்போது வந்துவிட்டது போலும்.



உத்திரப்பிரதேச மாநிலம் ஆக்ராவில் உள்ள இஸ்மத் உத்தௌலாவின் கல்லறை 17 ஆம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் கட்டப்பட்டது. இது நூர்ஜஹானால் தன் தந்தைக்காகக் கட்டப்பட்டது.

- க.ரவீந்திரன்

சிரிப்பு வந்து விட்டது.

அந்தச் சிரிப்பின் மெல்லிய ஒலி அவள் காதில் ஒலித்திருக்க வேண்டும். அவள் விழிகள் ஒருகணம் விரிந்தன.

“ஆ! நீங்களா?” என்று வியப்புடன் கேட்டாள். மறுகணம் அவளது வலது கரம் மளமளவென்று நெகிழ்ந்திருந்த மேல் தலைப்பைச் சரிசெய்து கொண்டது. தூங்கி எழுந்தவள் அப்படியே வந்து விட்டாள். கணவன் என எண்ணிக் கதவைத் திறக்க,

சந்துருவுக்கு அன்று இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். அன்று அவன்

பார்த்த புதுத் திரைப்படமான வள்ளியின் கணவனில் வள்ளியாக நடிக்கும் வனிதா தேவி வெள்ளித்திரை மோகினி என்று பெயர் எடுத்தவள். அழகி அழகி என்று அவளைப் புகழ்கிறார்களே, அவளை இந்த ஞானத்தின் காலில் கட்டியல்லவா அடிக்க வேண்டும். ஹூம்...



குடத்திலிட்ட விளக்குப் போல் இந்த இரண்டுங்கெட்டான் ஊரில் நான்குச் சுவர்க் கிடையில் வாழ்கிறாளே. சந்துரு மெல்ல மெல்லச் சிரித்தான். கண்ணைத் திறந்து கொண்டு சிறிது நேரம் யோசித்தான்.

'வள்ளியின் கணவன்' கதாநாயகி, இன்னும் சிறு பெண் போல்

# சுனாமியின் பினாமி

சுனாமியின் கோரதாண்டவத்தை
பார்த்ததுண்டு.
அதன் பினாமியின் ருத்ரதாண்டவத்தை
பார்த்ததுண்டோ?

கல்லிலே கலைவண்ணம் காணும்
கலைஞனாலும், கலாரசிகனாலும்கூட
ரசிக்கமுடியாமல் போனது
தானே வந்து தானே சென்ற
தானே போட்ட ருத்ரதாண்டவத்தை.

சுனாமிக்கு அதன் எல்லை தெரியும்.
தன்னை நம்பியவரை மட்டுமே
நம்ப வைத்து, வைத்து கழுத்தறுக்கும்.

சுனாமியின் பினாமியோ
கட்டறுந்த செவலைக் காளை.
வானமோ பூமியோ என
எகிறிக் குதித்துச் சென்ற
நாலு கால் பாய்ச்சல் சிறுத்தை.
பாரபட்சக் கண் அவிந்து போன
ஒற்றைக் கண் அரக்கன்.

பச்சைக்கூரை போட்டு
பவ்வியமாய் நின்று
நிழலோடு காய், கனி
அகமலர்ந்து தன் உத்தமர்களை
பிரதிபலன் எதிர்பாரா
பரோபகாரிகளை
தன் ரம்பப் பல் கொண்டே
கடித்துக் குதறி வீழ்த்திய
ஆழி வாழ் டிராகுலா.

தண்ணி அடித்துவிட்டு
வந்ததோ என்னவோ தானே,
புதுச்சேரி வந்து
கூட கொஞ்சம் மில்லி ஏற்றி

மேலாக்கும் தாவணியும் அணிந்து கொண்டு வந்தாள். பருவத்து எழிலை எடுத்துக் காட்ட என்னென்ன 'மேக்கப்' எல்லாம் செய்து கொண்டிருந்தாள். அந்த ஆடை அலங்காரம்தான் இப்போதைய நாகரிகம். ஆனால், ஞானம் அப்படி ஏதும் விபரீத ஆடை அணியவில்லையே. ஆறு கெஜம் கைத்தறிப் புடவை அணிந்திருந்தாள்.

லைானில் தான் ரவிக்கை. அதுவும், காற்றே வரமுடியாத கூடத்து அறையில் புழுக்கம் அதிகம் என்பதற்காகத் தளர்த்தி இருந்தது அவள்

அச்சுறுத்தும் பாட்டுப் பாடி
பூசாரி இல்லாமலே பேயாட்டம் ஆடி
குலை நடுங்க வைத்த கொள்ளிவாய் பிசாசு.

தானேக்கு கூரைகள்
கிள்ளுக் கீரைகளே!
பச்சைக் கீரை.
ஃபைபர் கூரை.
ஓலைக் கூரை.
சிமெண்ட் கூரை.
நைந்த கூரை.
எல்லா கூரைகளுமே
தானேக்கு தாளம் போட்டவையே.
தலை மறைவாய் போயினவே.

வழிச் செலவிற்கு ஆகும்
என நினைத்தவையோ கூரைகள்.
ஆணி, கயிறு, மூங்கில், சேலை,
மின்விசிறி, சட்டை, இத்யாதி, இத்யாதி,
கூடவே தூக்கிச் சென்றவை பல.
தானே கைவரிசைக் காட்டிச் சென்ற
எங்கள் ஊர் புதுச்சேரி
போர் முடிந்த களமாய்.
மூன்றாம் உலகப் போரே!

வீழ்வதெல்லாம் எழுவதற்குத்தானே
வீழ்ந்தே கிடக்க
நாங்கள் என்ன வந்தேறி குடிகாரர்களா?
எழுவோம்... நிமிர்வோம்

தானே வந்த தானேக்கு
தனி நன்றி.
பகலில் மட்டும் அது
தாண்டவம் ஆடி இருந்தால்...
ஓய்வே அறியாத எங்கள் ஊர்
ஓரேயடியாய்
ஓய்ந்தே போயிருக்குமே!

- ராஜ்ஜா,
புதுச்சேரி

குற்றமல்ல; அந்த பொல்லாத ஆடை அப்பொழுது சதிசெய்து விட்டது.

*ஊரின் கோடியிலிருந்த விவசாய ஆபீசுக்குப் போகும் போது, வழியே தினந்தோறும் மலராத தாமரை மொட்டைப் பார்த்திருக்கிறான். அந்த நினைவு இந்த நடு நிசி வேளையில் எங்கிருந்து வந்தது? வனமாலாவின் விழிகள் வெண் திரையில் பார்க்கும்போது அழகாகத்தான் இருக்கின்றன. இயற்கையான அழகாக இருக்க முடியாது; ஆனால், இங்கே ஞானத்தின் விழிகள்? வட்ட வடிவமாக*



இருந்தாலும் நொடிக்கு நூறு தடவை இமை இமையுடன் சேரும்போது ஒளிவிடும் அழகு இருக்கிறதே அதை ஏன் அவன் இப்போது நினைத்துக் கொண்டான்?

'இன்று இவ்வளவு நேரமாக்கி விட்டீர்களே' என்று அவள் கேட்டபோது அந்த முகத்திலே

**தி**ருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள குறுக்குத்துறை முருகன் கோயில் கோபுர விமானத்தில் மகாத்மா காந்தி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுவாமி விவேகானந்தர் லோகமான்ய பாலகங்காதர திலகர் ஆகியோரின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

- க.ரவீந்திரன்

தூக்கக் கலக்கத்தையும் மீறி ஏற்பட்ட ஒரு பொய்க் கோபம், கொஞ்சல், கெஞ்சல், ஆகா! அந்த உணர்ச்சிகளை நிஜம் நடிகையர் கூட ஏற்படுத்த முடியாது. ஆமாம்; அவளுடைய வலது கரத்திற்குத்தான் எவ்வளவு பரபரப்பு; வேகம். விலகியிருந்த மேடையை எவ்வளவு வேகமாக இழுத்துத் தோள் கூடத் தெரியாமல் போர்த்திக் கொண்டாள். ‘உடுக்கை இழந்தவன் கை போல்’ என்று வள்ளுவர் கூறிருப்பது எவ்வளவு சரி. இழந்தவள் என்று மாற்றுவதுதான் இங்கு சரி!

## 3

சந்துரு எப்போது தூங்கினானோ தெரியாது. ஆனால் காலையில் விழித்து எழும் போது சூரியனுடைய கரங்கள் அவனது முதுகில் பளீர் பளீர் என்று அடித்துக் கொண்டிருந்தன. சோம்பல் முறித்து எழுந்து பல் துலக்கக் கீழே வந்தான்.

“என்ன சார்வாள், முதல் ஆட்டத்திற்குப் போனீர்களா? இரண்டாவது ஆட்டத்திற்குப் போனீர்களா?” என்று குமாரசாமி கேட்டார். அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்துப் பதில் சொல்வதற்குள், சமையல் அறையிலிருந்து கந்தர்வ கானம் எழுந்தது. (அவள் குரலுக்கு அப்படித்தான் அவன் பெயர் சூட்டியிருந்தான்)

“அவர் உங்களுக்கு முன்னால் வந்து விட்டார். நீங்கள்தான் ராத்திரி ஒரு மணிக்கு வந்து கதவைத் தட்டினீர்கள். இரண்டாவது ஆட்டத்திற்கு நீங்கள்தான் போய்விட்டு வந்திருகிறீர்கள்” என்று ஞானம் அடுப்பில் பாத்திரத்தில் பாலைக் கரண்டியால் கிளறிக் கொண்டே கூறினாள்.



**சி**க்கிம் மாநிலத்தில் உள்ள பீமயஸ்ட்சி புத்த மடாலயம் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

- க.ரவீந்திரன்

அவளும் இரவு தூங்கவில்லையோ?

'ஓகோ! அப்போது குமாரசாமி நாம் வரும்போது வரவில்லை. அதனால்தான், அவள் தவறுதலாகத் தன் கணவர் என நினைத்துக் கொண்டு...' சந்துரு நினைவை வீசினான்.

"சார்வாளுக்கு முதல் ஆட்டம் பார்த்து விட்டு வந்தத் தூக்கக் கலக்கமே இன்னும் தெளியவில்லை. நான் இரண்டாவது ஆட்டத்திற்குப் போய் வந்தால் என் கதி எப்படியாகும்..." என்றார் குமாரசாமி சிரித்துக் கொண்டே.

“நீங்களும் தாமதமாக வந்தீர்களா?” என்று கொட்டாவி விட்டுக் கொண்டே கேட்டான் சந்துரு. அதற்குள் ஞானம் மணமணக்கக் காபியைச் சூடாக இரு டம்பளரில் ஏந்திக் கொண்டு கூடத்திற்கு வந்து விட்டாள்.

“நான் சினிமாவுக்குப் போகவில்லை. சாயுங்கால பூஜை செய்ய முருகன் கோயிலுக்குப் போனபோது அந்த ஊரிலே பாரதப் பிரசங்கம் முடிவு நாள் என்று தெரிந்தது. பாரதக் கதை யுதிஷ்டிரப் பட்டாபிஷேகம் முடிந்து மந்திரிகள் பேசி, ஊர்ப் பெரியதனக்காரர் பேசி சம்பாவனை செய்து முடிய பன்னிரெண்டு மணி ஆகிவிட்டது. ஊர் மணியக்காரர் காரிலேயே கொண்டுவந்து விடுவதாக வற்புறுத்தினார்.

என்னுடைய பஞ்ச கல்யாணிக் குதிரை இருக்கும் போது கார் எதற்கு? நல்ல இருட்டு வேளையில் சைக்கிளில் கண் கூடத் தெரியவில்லை. கோயில் தர்மகத்தா தங்கிப் போகுமாறு சொன்னார். இவள் தனியா இருந்தா பயப்படுவாளே என்று ஓடோடி வந்தேன். மாடியறையில் சார்வாளைக் குடித்தனம் வச்சது மறந்துப் போச்சு. நினைவிருந்தா இவ்வளவு அவசரப் பட்டுக் கொண்டு வந்திருக்கமாட்டேன். நான் காலையில் எழுந்து தான் வந்திருப்பேன்”

கபடமில்லாமல்தான் அவர் சொன்னார்.

சந்துரு கொல்லைப்புறம் சென்று விட்டான். அவன் திரும்பி வரும்போது குமாரசாமி இல்லை. அலுப்புச் சலிப்பில்லாமல் இருந்தால்தானே அவர் பிழைக்கலாம். முகத்தைத் துடைத்துக் கொண்டே வரும்போது சந்துரு ஒருமுறை கூடத்துப் பக்கம் திரும்பிப் பார்த்தான். ஞானம் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தாள். சந்துருவைப் பார்த்தவுடன் ஊஞ்சலிலிருந்து எழுந்து உள்ளே சென்றாள்.

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

சந்துரு வழக்கம் போல் 'டிரஸ்' செய்து கொண்டு புறப்பட்டான். படிக்கட்டுகளில் இறங்கி வரும்போது ஞானம் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு கீரையை ஆய்ந்து கொண்டிருந்தாள். பால் பாத்திரத்தை ஊஞ்சல் பலகையில் வழக்கம் போல் வைத்து விட்டுச் சந்துரு திரும்பினான். அவனுக்கு ஏதாவது பேச வேண்டும் போல் தோன்றியது.

"நேற்றைப் போல் இன்றைக்கு நேரமாகாது" என்றான் பல் தெரியாமல் உதட்டில் மட்டும் நகை நெளிய. ஞானம் எழுந்திருக்கவில்லை. அவன் முகத்தைப் பார்க்காமலேயே அரிவாள் மணையைச் சற்று நகர்த்தி, "இந்த வீட்டில் நேரம் என்பதற்குக் கணக்கே கிடையாது, பயமும் இல்லை, ஆனால் பொழுது மட்டும் தேரைப் போல நகரும்." என்றாள் மெல்ல. சந்துரு ரேழி வாசற்படியைத் தாண்ட எத்தனித்தான். ஏனோ மீண்டும் திரும்பிப் பார்த்தான். அவன் யூகித்தது வீண் போகவில்லை.

"நேற்றுப் பார்த்தீர்களே, அந்தச் சினிமா பாட்டுப் புத்தகம் இருக்கிறதா?" என்று ஞானம் கேட்டாள். சந்துரு கையை உதறிக் கொண்டான். அவளுக்குப் பாட்டுப் புத்தகத்தில் பிரியம் இருக்கும் என்று தெரிந்திருந்தால் வாங்கி வந்திருப்பான்.

"முன்னைப்போல் இப்போதெல்லாம் பாட்டுப் புத்தகத்தில் கதையும் பாட்டும் எங்கே போடறான். டிராமா நோட்டீசு போல் வந்துவிட்டதே. வேண்டுமென்றால் இன்று வாங்கி வருகிறேன்" என்றான் சந்துரு.

## எதிரொலிப் பாலம்

**ம**ஸாசுஸெட்சில் 'நியூடன் அப்பர் பால்ஸ்' என்ற கால்வாயின் மீது ஒரு பாலம் உள்ளது. அதற்கு எதிரொலிப் பாலம் என்று பெயர். இந்தப் பாலத்தின் கீழ் நின்று கொண்டு ஒருமுறை கூவினால் அது ஒரு முறையல்ல,

ஞானம் மெல்லச் சிரித்துக் கொண்டு, "வேண்டாம் வேண்டாம். பொழுது போகாததற்கு ஏதாவது எழுத்துக் கூட்டிப் படிச்சுண்டிருப்பேன். சினிமா எப்படி இருக்கு?" என்று கேட்டாள்.

"ரொம்ப ஓசத்தி என்று சொல்ல மாட்டேன். ஆனால் பாட்டெல்லாம் இனிமையாயிருக்கு" என்றான் சந்துரு.

இன்னும் அவளுடன் பேசிக் கொண்டே யிருக்கலாம். ஆபீசுக்கு நேரமாகிறதே. மத்தியானம் வேண்டுமானால் லீவு போட்டுட்டு வந்து பேசிக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணத்தில் அவன் அங்கேயிருந்து புறப்பட்டு விட்டான்.

அதேபோல்தான் லீவு போட்டு விட்டு வந்தான். ஆனால் குமாரசாமி ஊஞ்சல் பலகையில் படுத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார். சந்துரு ஒரு பாடலை முணுமுணுத்துக் கொண்டு மாடியேறிப் போய்விட்டான். சந்துரு மெல்லப் பாடிக் கொண்டிருப்பதைக் கேட்டு ரசித்தவாறே ஞானம் முற்றத்தில் உட்கார்ந்து துணிகளுக்குச் சோப்புப் போட்டுக் கொண்டிருந்தாள். சந்துரு கைப்பிடிச் சுவர் அருகே வந்து நின்றான். இரவு தாமதமாக வந்ததையும், அவள் கதவைத் திறந்ததையும், காலையில் பாட்டுப் புத்தகம் கேட்டதையும் ஒரு தரம் நினைத்துக் கொண்டே அவன் கட்டைச் சுவரில் அமர்ந்து ரசித்துப் பாடிக் கொண்டிருந்தான்.

ஞானம் துணிக்குச் சோப்புப் போட உட்கார்ந்திருக்கும் முறையும், அவள் கரங்கள் அசையும் போது வளைகுலுங்கும் ஒலியும், அவள்

இருமுறையல்ல, பதினேழு முறைகள் தொடர்ந்து எதிரொலியை எழுப்புகிறது. இது ஆச்சரியமாக உள்ளதால் அங்கே எப்போதும் கூவுவதற்குக் கூட்டம் நிரம்பி வழிகிறது.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி

## கருணை உள்ளம்

மன்னன் மகா ஃபிரெடெரிக் தாம் இறப்பதற்குச் சில வினாடிகள் முன்னதாகக்கூட தன்னுடைய கருணை உள்ளத்தை இப்படி வெளிப்படுத்திக் கொண்டார். எப்படி? குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த தன்னுடைய நாயின் மீது கம்பளியைப் போர்த்தச் சொன்னார்.

உடல் இலேசாக அசைவதும் ரசிக்க ரசிக்கப் பாடலில் உற்சாகம் பொங்கியது.

ஞானம் ஒரே ஒரு தடவை மட்டுமே நிமிர்ந்துப் பார்த்தாள். பிறகு ஒன்றுமே தெரியாதவள் போல் கருமமே கண்ணாயினாள். குமாரசாமி அவசரம் அவசரமாக எழுந்துவிட்டார். "ஞானம் மணி என்ன இருக்கும்?" என்று பரபரப்புடன் கேட்டார்.

ஞானம் வெண்பல் தெரிய, "ஏன், ஆபீசுக்கு நேரமாகி விட்டதா?" என்றாள், சிரித்தவாறு,

குமாரசாமி கொட்டாவி விட்டுக் கொண்டே சோம்பல் முறித்தபோது மாடியில் நிற்கும் சந்துருவைப் பார்த்துச் சிரித்துவிட்டு, "எனக்கு என்ன? ஸார்வாள் போல் இஷ்டப்படி போய் இஷ்டப்படி வர ஆபீசு உத்தியோகமா?" என்று கேட்டுவிட்டு,

"மணி என்ன ஸார்?" என்று குரல் கொடுத்தார்.

"மணி பன்னிரண்டு" என்று குரல் கொடுத்தான் சந்துரு.

"அடாடா, ரொம்ப நேரம் தூங்கிவிட்டேனே? நாளைக்கு அம்மனுக்குச் சந்தனக் காப்பு ஒருத்தர் சாத்துறார். லிஸ்ட் போட்டுச் சாமான் எல்லாம் வாங்கணுமே" என்று வார்த்தைப்போல் உடலிலும் அந்தப் பரபரப்பைப் புலப்படுத்திக் கொண்டார்.

**தெரியுமா?**

**நா**ட்டுக்குத் துரோகம் செய்பவர்களை 'குவிஸ்ஸிங்' என அழைக்கிறார்கள்.
**ம**யிரிழையின் அளவு, ஒரு அங்குலத்தின் 48-ல் ஒரு பகுதி.
**ம**னிதனைத் தவிர வேறு எந்தப் பிராணியும் மல்லாந்து தூங்குவதில்லை.
**க**டலுக்கடியில் முதல் புகைப்படம் 1893-ம் ஆண்டு எடுக்கப்பட்டது.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி

ஞானம் அவர் கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாதவள் போல், "அப்போ நான் கேட்டது என்ன ஆச்சு?" என்றாள்.

"மறக்கவில்லை ஞானம். இன்று அவசர வேலை இருக்கு. நினைவே வரவில்லை"

"என்றைக்குத்தான் உங்களுக்கு அவசர வேலை இல்லை" என்று சிணுங்கிக் கொண்டே கேட்டாள் ஞானம்.

குமாரசாமி கோபப்படாமல் "ஆமாம், ஞானம்; இப்பொழுதுதான் புதிதாகக் கேட்கிறாயா என்ன? எப்போதும் அவசர வேலைதான். நம்ம ஊர் சாட்சி லிங்கேஸ்வரர் லீவு கொடுக்கிறாரா" என்று கூறிக் கொண்டே போனவரைக் குறுக்கிட்டு,

"ஆமாம்; எப்படி இன்றைக்கு மாலையில் என்னைச் சினிமாவுக்கு அழைத்துப் போகிறேன் என்று சொன்னீர்கள்?" என்று ஞானம் கேட்டாள்.

கிரிமினல் லாயரின் குறுக்குக் கேள்வி போல் ஞானத்தின் கேள்விக்குக் குமாரசாமியால் பதில் சொல்ல முடியவில்லை.

நல்ல வேளையாக சந்துரு அப்போது வந்தானோ அவர் தப்பினாரோ!

"ஸார்வாள் பார்த்த சினிமா எப்படி?" என்று கேட்டார் குமாரசாமி.

## மொழித் தொண்டு

பெண்கள்
வீட்டுக்கு மட்டுமல்ல...
இலக்கியத்திற்கும்
சேவை செய்கிறார்கள்...
இல்லையென்றால்
இத்தனைக் கவிஞர்கள்
தமிழில் தோன்றியிருப்பார்களா...?

***

கவலை
கவலை வந்தால்
கவலைப்பட்டுக் கலங்குவதை
விட்டுவிடு...
கலைக்குள்ளே
கலை இருப்பதைக்
கண்டு தெளிந்து வென்றுவிடு...!

- குடந்தை பாலு

அவன் பதில் சொல்வதற்குள் ஞானமே முந்திக் கொண்டு, "ஒண்ணாம் கிளாசா இருக்காம். பாட்டுப் புத்தகம் கொடுத்தார். பாருங்கோ, பாட்டெல்லாம் நன்னா இருக்கு" என்று பதில் சொன்னாள். அவ்வளவு நாட்கள் இல்லாத குரல் அவளுக்கு அன்று எங்கிருந்துதான் வந்ததோ? அவள் இப்படி அடித் தொண்டையுடன் பேசி குமாரசாமி அறிந்ததில்லை.

"சந்துரு என்ன சினிமா? இவ என் உயிரை எடுக்கறா. எப்பவும் வீட்டுக்குள்ளே அடைஞ்சுக் கிடக்கறதுக்கு இந்தக் காலத்துலே யார்தான் ஒப்புக்குவா?" என்று குமாரசாமி சந்துருவை நோக்கிக் கேட்டார்.

ஞானத்தைக் கடைக் கண்ணால் பார்ப்பதும், பிறகு நேரிடையே உற்று நோக்குவதுமாகச் சில வினாடிகள் இருந்துவிட்டு, "வள்ளிக் கணவன்... வனமாலாவும் சுந்தரபாபுவும் நடித்தது" என்றான்.

குமாரசாமி வனமாலாவைக் கண்டாரா? சுந்தர பாபுவைக் கண்டாரா?

"ஓகே சுந்தரபாபு சுப்ரமண்யராக வேஷம் கட்டறாரா? அது யாரு குட்டி... வனமாலா? அது தான் வள்ளியா? புராணப்படம் தானே...பரவாயில்லை, போய்ப் பார்த்துட்டுத்தான் வாயேன்" என்றார் தன் மனைவியின் பக்கம் திரும்பி.

சந்துரு சிரித்துக் கொண்டான்.

"இவருக்கு சுப்ரமண்யர் –

வள்ளி – தெய்வயானை இதே நினைவுதான்" என்று கூறிக் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். ஞானம் அவ்வாறு சிரிப்பது சந்துருவுக்கும் குமாரசாமிக்கும் பிடித்துதான் இருந்தது. ஆனால் அவள் சிரிப்பதன் காரணம் தெரியாமல் குமாரசாமி விழிக்க,

"வள்ளிக் கணவன் – வள்ளிக் கல்யாணமில்லை! இது ஒரு இட்டுக் கட்டிய கதை. சுந்தரபாபு இருக்கான் பாருங்கோ தமிழ்நாட்டுப் பிரபல நடிகர் – அவன் வனமாலாவைக் காதலிக்கிறான். எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒரு பொல்லாதவன் நடுவே வந்து இல்லாத கஷ்டங்களைக் கொடுக்கிறான் – அப்புறம் – அப்புறம்." என்று வள்ளிக் கணவன் கதையைப் பாட்டுப் புத்தகத்தில் போட்டிருந்த வரையில் கிடுகிடுவென்று சொன்னாள்.

"அப்புறம் வெள்ளித்திரையில் மீதியைக் காண்க" என்று கூறிச் சந்துரு சிரித்தான்.

குமாரசாமியும் சிரித்தார். ஞானமும் குலுங்கக் குலுங்க நகைத்தாள்.

"சுந்தரபாபு வனமாலாவை நிஜமாகவே கல்யாணம் செய்து கொண்டு விட்டானாமே மெய்தானா? அன்னிக்கு வீடு கூட்டறவ பேசிக் கொண்டாள்" என்று ஞானம் சந்துருவை நோக்கி நேரிடையே கேட்டாள்.

"கலியாணம் ஆச்சு; டைவர்ஸும் ஆயுடுத்து" என்றான் சந்துரு, குமாரசாமியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

டைவர்ஸ் என்றால் என்ன என்று புரியாமல் ஞானம் விழித்தாள்.

"அப்படின்னா?" என்று கேட்டாள் ஞானம்,

"அப்படின்னா?" என்று கேட்டார் குமாரசாமி.




# உங்கள் நூலகம்

## அரண்

(கவிராசன் தமிழ் மன்றக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு)
தொகுப்பாசிரியர்கள்:
முனைவர் தி.சாமுண்டீஸ்வரி
கவிஞர் துரைகோ
மலர்கண்ணன் பதிப்பகம்
13/66, 4-வது தெரு, பி.பி.நகர்,
அரும்பாக்கம், சென்னை-106.

**சென்னை, வைணவக் கல்லூரியில்**

"உட்காருங்கோ... நிக்கறேளே" என்று ஊஞ்சலைக் காட்டினார் குமாரசாமி.

"பிடிக்காத புருஷனும் பெண்சாதியும் சட்டப்படி பிரிந்து போறதுன்னு அர்த்தம்" என்று விளக்கினான் சந்துரு.

"அப்படியா! அறுத்து வைச்சுப் பேசறதுன்னு நம்ப பக்கம் சொல்வோமே அதுவா?" என்று சப்புக் கொட்டினார் குமாரசாமி.

"ஓ! அப்படிக் கூட உண்டா?" என்று தன் விழியை அகல விரித்து அவள் கேட்ட போது சந்துருவுக்கு இதயத்தில் என்னமோ செய்தது.

"ஆமாம்; சுந்தரபாபுவுக்கு வரவர உடம்பு ஊதி விட்டது. புஸ் புஸ்னு மூச்சு விடறது வனமாலாவுக்குப் பிடிக்கலே."

"வனமாலா என்ன செய்தாள்?"

"ஒரு வடக்கத்தி நடிகரைக் கல்யாணம் செஞ்சுண்டுட்டா. அவன்

அண்மையில் கவிராசன் தமிழ் மன்னத்தினர் ஓர் இலக்கிய விழாவை நடத்தினர். க.மணி எழிலன் கவிஞர் துரைகோ இணைந்து நடத்திய இந்த ஒருநாள் நிகழ்வில் பல தமிழறிஞர்களும், பேராசிரியப் பெருமக்களும் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்த பேராசிரியர்கள் தமிழின், தமிழ்ச் சமுதாயத்தின் உயர்வை விளக்கும் பல கட்டுரைகளை வாசித்தனர். அப்படி வாசிக்கப்பட்ட அரவான் வழிபாடு, கூத்துக்கலை, குறுந்தொகை காட்டும் பழக்க வழக்கங்கள், சங்க இலக்கியம் காட்டும் பண்பாடு, பாரதி சிந்தனைகள் ஓர் ஆய்வு, புறநானூற்றில் கல்வி, வரலாற்று நோக்கில் பெண்கள் போன்ற 72 தலைப்புகளிலான கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பெற்றிருக்கும் நூல் தான் இது. நவீன இலக்கியப் படைப்பாளிகள் பற்றியும் ஆய்வு செய்து எழுதப்பெற்ற கட்டுரைகள் இதில் உள்ளன. இலக்கிய ஆய்வாளர்களுக்கு இது ஓர் அற்புதப் பேழை எனலாம்.

**- கௌதமநீலாம்பரன்**

சேப்பா அழகா இருந்தான்."

குமாரசாமி இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக், 'கருமம் கருமம்' என்று தலையில் அடித்துக் கொண்டார்.

"நமக்கெதுக்குக் கூத்தாடி பேச்செல்லாம். காசைக் கொடுத்தோம் ஏதோ கொஞ்ச நேரம் சினிமாப் பார்த்தோம் வந்தோம்னு இல்லாம..." என்று முணு முணுத்துக் கொண்டார்.

"நீங்க சினிமாவுக்குப் போனதேயில்லையா?" என்று சந்துரு கேட்டான்.

"எப்பவோ பட்டினத்தார்னு ஒரு சினிமாவுக்குப் போயிருக்கேன். தண்டபாணி தேசிகர் நடிச்சது. ஆகா அதுன்னா படம். நான் போன அன்னிக்கு ஒரு வக்கீல் அப்பவே காஷாயம் போட்டுண்டுட்டார்" என்றார்.

இப்போது மீண்டும் ஞானமும், சந்துருவும் சேர்ந்துச் சிரித்தனர்.

குமாரசாமி கொல்லைப்புறம் போய்விட்டு வந்தார். வரும்போதே, "ஸார்வாள் எனக்காக ஒரு உதவி செய்வீங்களா?" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார்.

"ஆஹா – என்ன உதவி... சொல்லுங்க" என்றாள் சந்துரு.

"ஞானத்தை இன்னிக்குச் சினிமாவுக்கு அழைச்சுண்டு போறேன்னு நான் வாக்குக் கொடுத்துட்டேன். எனக்கு அவசர ஜோலியிருக்கு. வடுகநாதன் கொட்டகையிலே டிக்கட் மட்டும் வாங்கிக் கொடுத்துட்டா போதும். சுப்பாண்டி வண்டி கொண்டு வருவான். அதுலே அவ போயிடுவார். வரச்சே ஆட்டம் விட்டதும் நான் அழைச்சுண்டு வந்துடறேன்" என்றார்.

ஞானம் முகத்தைத் தூக்கிக் கொண்டு "எனக்கு ஒண்ணும் சினிமா வேண்டாம்" என்று கூறிவிட்டு சமையலறைக்குள் சென்று விட்டாள். அவள் சொல்லியபடி செய்தாள். குமாரசாமி எவ்வளவு கேட்டுக் கொண்டும் முடியவில்லை. அவருக்கு கோயில்... கோயில் பூஜைதான் முக்கியம். இன்னிக்கு சினிமாவுக்குப் போறேன் லீவு வேண்டும் என்று கேட்க முடியுமா? யாரைக் கேட்பது? தர்மகர்த்தா ஊரிலில்லை ஆபீசர் நாலு கோயிலுக்கு ஒருவர், இந்தக் கோயிலுக்கு எப்பொழுது வருவாரோ! அவர் கடமையைச் செய்யப் புறப்பட்டு விட்டார். சந்துரு மாடியறைக்குப் போய்விட்டான்.

## 4

அந்தி மறைந்து இருள் மெல்லக் கவிந்தது. கோயிலுக்குச் சென்று அம்மன் சந்நிதி விளக்குக்கு எண்ணெய் விட்டு விட்டு வரும் போது கோபுர வாசல் அருகே ஞானம், சந்துருவைச் சந்தித்தாள்.



ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் ஸ்ரீநகரில் உள்ள ஹசாரத் பால் மசூதி இது. தால் ஏரியின் இடதுகரையில் உள்ளது.

- க.ரவீந்திரன்

சந்துரு வழக்கம் போல் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தான்.

ஞானம் ஒரு கணம் நின்றாள். சந்துருவும் புன்முறுவல் புரிந்தவாறு நின்று,

“ஏன் சினிமாவுக்குப் போகமாட்டேன் என்று சொல்லி விட்டாய்?” என்று கேட்டான்.

அவளை ஏகவசனத்தில் கேட்டதை அவள் கவனிக்காமல்,

“தனியே நான் போய் அந்தக் கொட்டாயிலே உட்கார்ந்து சினிமா

பார்க்கப் பயமாயிருக்காதா” என்றாள்.

சந்துரு சிரித்தான்.

ஞானம் மேலும் தொடர்ந்து பேசியிருப்பாள். கோபுர வாசற்படிக்குச் சற்றுத் தள்ளி இருளில் இருவர் பேசிக் கொண்டிருப்பதில் ஒரு குரல் அவள் காதில் தெளிவாக விழுந்தது.

“நம்ம குருக்கள் பெண்சாதிதாண்டா.” என்றது ஒரு குரல்,

“ஓகோ! யாரோ புச்சா இருக்கேன்னு பார்த்தேன்”

“அது அதிகமா வெளியே வராது. வீடுண்டு தானுண்டென்று கிடக்கும்.”

“குருக்களுக்கு இப்படிக் கிளிபோல சம்சாரம் இருக்குதுன்னு எனக்குத் தெரியாது” – என்றது ஒரு குரல்.

ஆனால் அடுத்த குரல் சுவாரசியமாகப் பதில் கூறவில்லை.

“பெண்சாதி வாய்க்கறது ஓர் அதிர்ஷ்டம். நம்ம மணியக்காரரு ராசாவாட்டமா இருக்காரு. அவருக்கு வாய்ச்சதோ பத்ரகாளி! அதுபோகட்டும்... முன்னே ராஜா குருக்கள் இருந்தாரே – அவரு எம்மாம் அழகு! அவரு பெண்சாதி? ஓ! தேடிப்பிடிச்சுக் கட்டிக்கிட்டாரு பாரு!”

அந்தச் சம்பாஷணையை அதுக்கு மேலே கேட்க விரும்பவில்லை

**முதல் குரல்**

**வெ**ள்ளையனை எதிர்த்து முதலில் குரல் எழுப்பியவன் மாவீரன் புலித்தேவன். 1755–ல் கும்பினியாரின் முதல் கர்னல் அலெக்ஸாண்டர் கெரான் என்பவனை எதிர்த்துப் போராடினான்.

**கடலின் நிறம்**

**இ**ந்தியாவைச் சுற்றியுள்ள கடலின் நிறம் நீலம்.


'நெடுஞ்சாலை' படத்தில் ஆரி, ஷிவதா

ஞானம். அரைகுறை சம்பாஷணையுடன் மனத்திலே ஒரு பெரும் பாரத்தை ஏற்றிக் கொண்டு வந்து சேர்ந்தாள். வீட்டிற்குள் போகப் பிடிக்காமல் வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தாள்.

வெகுநேரம் கழித்துச் சந்துரு வந்தான். அவன் அவளுடன் பேசவில்லை. அவளும் அவனுடன் பேசவில்லை.

ஆப்பிரிக்காவுக்கும் அரேபியாவுக்கும் இடையேயுள்ள கடலின் நிறம் சிவப்பு.
துருக்கி ஓரமாக உள்ள கடலின் நிறம் கறுப்பு.
சீனாவின் அடுத்துள்ள கடலின் நிறம் மஞ்சள்.

**புத்தர் சிலை**

**உ**லகிலேயே புத்தருக்குத்தான் அதிகமான அளவில் சிலைகள் உள்ளன. அளவில் மிகப்பெரிய சிலையும் புத்தருடையது தான்.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி



கழுகு மலை, திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியிலிருந்து 19 கி.மீ தொலைவில் உள்ளது. இங்குள்ள முருகன் கோயிலில் வெட்டுவான் கோயில் சமணர் சிற்பங்கள் உள்ளன. கழுகுமலை வெட்டுவான் கோயில் மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட ஒரு கற்கோயில். இக்கோயில் வடிக்கப்பட்ட பின் துண்டிக்கப்பட்ட மலையும் கோவிலருகில் காணும்படியாக உள்ளது. இதுபோன்ற அமைப்புள்ள கற்கோயில் தமிழகத்தில் இது ஒன்றுதான். எல்லோராவில் கைலாசநாதர் கோயில் இதுபோன்று காணப்படுவதால் கழுகுமலை வெட்டுவான் கோவில் 'தென்னக எல்லொரா எனப்படுகிறது.

- க.ரவீந்திரன்

'வள்ளிக்கணவன் ஆட்டம் நேத்தியோட சரியாம். இன்னிக்கு வேறே படமாம்." என்றார் குமாரசாமி. ஆபீசுக்குப் போவதற்கு மாடியிலிருந்து இறங்கி வந்த சந்துருவைப் பார்த்து.

ஞானம் முற்றத்தில் பண்ட பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்தாள். எங்கோ மாடிப் பக்கமும் நிமிர்ந்து

பார்த்தான். சந்துரு நின்று கொண்டிருந்தான்.

“ஞானம், இன்னிக்காவது கோபத்தை விட்டுவிட்டுப் போயிட்டு வா. தனியாப் போகப் பயமாயிருந்தா ஸார்வாளை அழைச்சுப் போகச் சொல்கிறேன்” என்று கூறியவர் மனத்தில் எந்தவித மாசு இல்லாமல் தன் மனைவியையும் சந்துருவையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு,

“அன்றைக்கே சொல்லலியா? ஸார்வாள் நம்ப ஊர்னு. அவர் வித்தியாசமா தெனைச்சிக்க மாட்டார்” என்றார். ஞானம் ஒன்றுமே சொல்லாமல் கொல்லைப்புறம் போய் விட்டாள்.

சந்துருவும் காரியாலயம் சென்றுவிட்டான். வழக்கம் போல் அவன் ஆபீசிலிருந்து புறப்படும்போது குமாரசாமி சைக்கிளில் அடுத்த கிராமம் செல்பவர் எதிரே வந்தார். தன் இடுப்பிலுள்ள சம்புடத்தினின்று இரண்டு வெள்ளி ரூபாயை எடுத்து, “சேர் டிக்கட்டுக்கே அழைச்சுண்டு போங்கோ” என்று பணத்தை நீட்டினார்.

சந்துரு ஒரு கணம் அயர்ந்து விட்டான். குமாரசாமி விளையாட்டாகச் சொல்கிறாரா? அல்லது நிஜம்தானா என்று யோசித்தான். பிறகு அவர் சொல்வது உண்மைதான் என்பதைத் தெரிந்துக் கொண்டு, “காசு ஹிஹி” என்று பல்லை இளித்தான். சிறிது நேரம் பரஸ்பரம் ‘ஹிஹி’ என்ற இழுபறி நடந்தது.

## 5

சந்துருவுக்குச் சினிமா பார்த்ததாகவே தோன்றவில்லை. அவன் இதயம் ‘திக் திக்’ என்று வழக்கத்துக்கு விரோதமாக அடித்துக் கொண்டது. ஞானம் மிகவும் ரசித்துத் திரையில் ஓடும்

## கவிதை முற்றம்

இலைகளுக்கு
மழையின்
இலவச முத்தங்கள்
– பனித் துளிகள்!

நிலவைப் பற்றி
எழுதினான் கவிதை...
– அமாவாசை இரவில்!

காதலும்
ஒரு கடத்தல் தொழில்தான்...
அங்கே கடத்தப்படுவன
– இதயங்கள்!

வானமங்கைக்கு
வளைகாப்பு விழா...
மின்னுகின்றன வளையல்கள்...
– வானவில்!

உழைப்பாளிகள்
சேர்ந்து கட்டிய
தித்திப்பு வீடு..
– தேன்கூடு!

மது அருந்தினான்...
தள்ளாடியது
அவன் மட்டுமல்ல
அவன் குடும்பமும்...!

தென்றலே...
குளத்து நீரைத்
தீண்டாதே...
அங்கே
நட்சத்திர விழா
நடைபெறுகிறது...!

– குடந்தை பாலு

படத்தை நிஜமாகக் காணும் காட்சி என்ற எண்ணத்தில் பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்வப்போது சந்துருவின் பக்கம் திரும்பி அது என்ன? இது என்ன? அது ஏன் இப்படி? இது ஏன் இப்படி? என்று சந்தேகங்களை கேட்டுக் கொண்டிருந்தாள்.

வீட்டிற்கு வந்து கூட ஞானத்திற்குத் தான் பார்த்த படநினைவுதான். குமாரசாமி அர்த்த ஜாம பூஜை முடிந்து இன்னும் வரவில்லை. சந்துரு ஊஞ்சலில் உட்கார்ந்து மெல்ல ஆடிக் கொண்டிருந்தான். ஞானம் விளக்கின் அருகே உட்கார்ந்து பாட்டுப் புத்தகத்தைப் பன்னிரண்டாவது தடவையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அவன் அந்த மாளிகையிலிருந்து அடுத்த மாளிகைக்குத் தாண்டுகிறானே பயமாயிருக்காதோ? கத்தியை எடுத்து இரண்டு பேரும் சண்டை போடுகிறார்களே நிஜமாகவே காயம் பட்டிடாதோ? அந்தத்

தோட்டத்திலே அவனும் அவளும் ஆடிப்பாடறா; அவன் அவள் கன்னத்தைத் தொடறானே அவளுக்கு வெட்கமா இருக்காதோ?" என்றெல்லாம் ஞானம் உற்சாகத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

குமாரசாமிக்குச் சந்தோஷம் தான். இவ்வளவு நாட்களை விட ஞானத்திற்கு ஏற்பட்ட கலகலப்பு அவருக்கே பிரமிப்பாக இருந்தது. தம்பதிகளுக்குள் சண்டை சச்சரவு இல்லை என்றாலும் ஞானம் கலகலப்பாக அவருடன் பேசியது கிடையாது. புது மணப் பெண் போலவே இயந்திரகதியில் எல்லாம் நடந்து வந்தது. குழந்தை இல்லையே என்ற ஏக்கத்தினால் இருக்கலாம் என்று குமாரசாமி தனக்குள்ளே சமாதானம் செய்து கொள்வார். பட்டணமும் இல்லாமல் கிராமமுமில்லாமல் இரண்டுங்கெட்டான் ஊராய் இருப்பதால் அக்கம் பக்கத்தில் அளவளாவத் தெரிந்தவரில்லாத தால் கலகலப்பு இல்லாமலிருக்கலாம் என்று நினைத்துக் கொள்வார். அதற்காக – ஒருநாள்கூட அவள் முகம் கோணி நடந்து கொண்டதோ எதிர்த்துப் பேசியதோ கிடையாது.

இப்போது குஷியும் சிரிப்பு வார்த்தைகளும் துள்ளும் நடையுமாக ஞானம் மாறியவுடன் குமாரசாமியின் உள்ளத்தில் மகிழ்ச்சிதான். ஒரு சினிமா இப்படிப்பட்ட டானிக்காக அமைந்துவிட்டது அவருக்கும் ஆச்சர்யம் தான்.

சந்துரு அலங்காராதிகளுடன் தயாராகு முன்பே ஞானம் சினிமாவுக்குப் புறப்படத் தயாராகி விடுவாள். நாற்காலி டிக்கட்டுதான் அவளுக்குப் பிடித்த இடம். அவளுடைய ஆயிரம் கேள்விகளுக்குப் பொறுமையாச் சந்துரு பதிலளித்தாலும் சினிமா பார்க்கும் மற்றவர்களுக்குச் சங்கடம் ஏற்படாத இடம். ஆனால் சோடா கலர் விற்பவர்கள் மட்டும் நூறு தடவை குறுக்கும் நெடுக்கும் வராமல் இருந்தால் நன்றாகத் தான் இருந்திருக்கும். அந்த விடலைகளின் விஷமப் பார்வையைச் சந்துரு புரிந்து கொண்டான்.

## கடல் நீரில் உள்ள உப்புக்கள்

கடல் நிரில் எண்ணற்ற வகையான உப்புக்கள் கரைந்துள்ளன. அவற்றுள் முக்கியமான சில உப்புக்கள் என்னென்ன சதவீதத்தில் அமைந்துள்ளன என அறிவோமா... குளோரைடு 54.3%, சோடியம் 30.2%, சல்பேட் 7.6%, மக்னிசியம் 3.7%, கேல்சியம் 1.2%, பொட்டாசியம் 1.1%, மற்றவை 1.9% ஆகும்.

ஒவ்வொரு முறையும் ஞானத்துடன் சினிமாவுக்குப் போகும்போது சந்துருவின் இதயம் அமைதியான அறையில் கேட்கும் கடிகார சப்தம்போல் 'டிக் டிக்' என்ற ஒலி எழுப்பும். தன் எதிரே நின்று பேசக் கூச்சப்பட்ட ஞானம் எவ்வளவு சரளமாகப் பழகுகிறாள் என்பதை நினைக்கும்போது அவனுக்குப் பயமாகக்கூட இருந்தது. யாராவது ஏதாவது நினைப்பார்களோ என்கிற கவலையில் உள்ளத்தின் ஒரு மூலையில் இல்லாமலில்லை. ஆனால், கவலையையும் கூச்சத்தையும் மீறி அவனையறியாமல் மெல்ல மெல்லக் கிளர்ந்து வந்த அசுர எண்ணத்தை அவனால் தடுக்கமுடியவில்லை அதற்கு மேலும் தூபம் போட்டது சினிமாக் கொட்டகை டீக்கடை பையனும் பாட்டுப் புத்தகம் விற்கும் பையனும் பேசிக் கொண்டது.

"சம்முன்னு வராரு மாப்பிள்ளைக் கணக்கா?" என்றான் டீப் பையன்.

"மாப்பிள்ளைக் கணக்கா என்ன? மாப்பிள்ளை தாண்டா அவரு! கவர்ன்மெண்டிலே வேலை. ஆனாலும் சொத்துக்காரருடா. பாரேன் வேளைக்கு ஒரு டிரஸ்ஸு."

"அப்படின்னா அந்தப் பொண்ணு புருஷனா அவரு?"

"பின்னே இன்னா நீ நெனைச்சுக்கிட்டிருந்தே? அடப்பாவி! வேறே ஏதாவது தள்ளிக்கிட்டு வந்தானென்று நெனைச்சயா...?

**இப்படியும் ஒரு மிருகம்**

க்னூ (Gnu) எனப்படும் ஒரு வகை மிருகம் தென் ஆப்பிரிக்காவில் உள்ளது. இதன் உடலும் கால்களும் மான் போலவும், தலை எருது போலவும், வால் குதிரையுடையது போலவும், தோற்றம் எருமையைப் போலவும் இருக்கும். பார்ப்பதற்கு கொடிய மிருகம் போலக் காட்சியளித்தாலும் இது மிகவும் சாதுவான மிருகம்.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி

இல்லைன்னா இவ்வளவு நெருக்கம் எப்படிடா வரும்?”

## 6

அதற்கு மேல் சந்துரு காதுகொடுத்துக் கேட்கவில்லை. அன்று அவனுக்குப் படம் பார்க்கவே ஓடவில்லை. அவன் தான் அப்படி உடையணிந்திருந்தான் என்றில்லை. ஞானமும் அப்படித்தான். அந்த இரண்டு மாதங்களில் அவள் குமாரசாமியைத் தொந்திரவு செய்து வாயில், டெர்லின், டெர்ரி காட்டன் என்று புடவைகளை வாங்கிவிட்டாள். டவுனுக்குப் போய் தனக்கு பிரா வாங்கி வரச் சொன்னாள். குமாரசாமிக்கு பிரா என்றால் தெரியுமா?

படம் ஆரம்பிக்கும்முன் தான் வாங்கி வந்த சாக்லெட்டுகள் இரண்டு மூன்றை அவளிடம் நீட்டினான். அவள் விழிகளால் நன்றி தெரிவித்துக் கொண்டு அவனுடைய உள்ளங் கையிலிருந்து ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்ள முயன்றாள். மங்கிய வெளிச்சத்தில் சாக்லெட் தடம் தெரிவதற்காக ஒரு கரத்தால் அவன் உள்ளங்கையைப் பிடித்துக் கொண்டு ‘பால் டாபி இருக்கோன்னு பாக்கறேன்’ என்று துழாவினாள். சந்துருவின் நரம்புகளில் இரத்த ஓட்டம் வழக்கத்துக்கு விரோதமாக இருந்தது. தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணம்

அவன் நாசியைத் துளைத்தது. அவனுக்குப் படம் பார்க்கவே ஓடவில்லை.

அவர்கள் வீட்டையடையும்போது குமாரசாமி கோவிலிலிருந்து வழக்கத்திற்கு விரோதமாக வீட்டிற்கு வந்து விட்டார். தன் மனைவி காலில் ஸ்லிப்பர் போட்டுக் கொண்டு நடக்கத் தெரியாமல் நடந்து வருவதைப் பார்க்கும்போது அவருக்கே சிரிப்பும் வேதனையும் கலந்து வந்தன.

படிக்கட்டு ஏறும்போது "அடாடா, பவுடர் வாங்கணும்னு நெனைச்சேன், மறந்துட்டேனே" என்றாள் ஞானம். மறுநாள் விடிந்தால் துளியும் முகப்பவுடர் இல்லையென்று அவளுக்குக் கவலை. பவுடர் இல்லாமல் சிவப்பாக இருக்கிறாளே, அவள் இப்படிக் கவலைப்படுகிறாளே என்று குமாரசாமிக்குக் கவலை.

இரவு அவளே தொண தொணவென்று குமாரசாமியிடம் பேசித் தீர்த்துவிட்டாள். அவருக்கு ஏனோ அன்று மனசு சரியாயில்லை. தன் மனைவி பேசுவதற்கெல்லாம் உம் கொட்டிக் கொண்டிருந்தார்.

"இரண்டு நாள் பொறுத்துக்கோ ஞானம்; பவுடருக்குக் காசு தருகிறேன். இந்த மாசம் வரவுக்கு மீறிய செலவு. இன்னும் புடைவைக் காரனுக்குப் பணம் கொடுக்கவில்லை. சொன்னால் கோபிச்சுக்க மாட்டியே. இப்ப கொஞ்சம் அதிகமாகத்தான் ஆடம்பரப் பொருளுக்குச் செலவாறதுன்னு நினைக்கிறேன்" என்றார் குமாரசாமி.

ஞானம் ஒன்றும் பேசவில்லை. பிறகு மெல்ல,

"உங்களுக்குத்தான் பவுடர், ஸ்நௌ ஏதுமே பிடிக்கவில்லை. காலுக்குச் செருப்புக் கூடப் போட்டுக் கொள்ளமாட்டேன் என்கிறீர்கள். தினம் தோய்த்துத் தோய்த்துக் காவி ஏறிய வேஷ்டியை விடமாட்டேன் என்கிறீர்கள். மாடிச் சந்தருவைப் பாருங்கள்.



'புதிய திருப்பங்கள்' நந்தா, கர்லின்

நேற்றுக்கூட விலை ஒசந்த ஷர்ட் வாங்கியிருக்கிறார். ஆமாம்; நான் ஒன்று கேட்கிறேன். கோபிக்க மாட்டீர்களே" என்று மழலை உதிர்த்தாள்.

"சொல்லு ஞானம் உன்னை நான் என்று கோபித்திருக்கிறேன்?"

"குருக்கள் கிராப்பு வைத்துக் கொள்ளக்கூடாதா? கோயிலிலிருந்து வீட்டிற்கு வந்தபிறகு டெர்லின் போட்டுக் கொள்ளக்கூடாதா?"

குமாரசாமி கோபப்படவில்லை. அவளுடைய ஆதங்கத்தைப் புரிந்து கொண்டார். என்றாலும் நியாயத்தை எடுத்துச் சொல்லி அவளைத் திருத்த விரும்பி,

“நம்ப பரம்பரையில் அப்படி இல்லை. என் தாத்தா திருக்கழுக்குன்றக் குருக்கள். என் அப்பா காஞ்சீபுரத்தில் முக்யக் குருக்கள். அவர்கள் நியம நிஷ்டை, பக்தி இவற்றில் எனக்கு நூறில் ஒன்று கிடையாது. நமது ஆசாரத்தின் அடையாளமாக இந்தச் சிகையையும் மாற்றினால் நான் அம்பிகை சந்நிதிக்குள் எப்படிப் போவேன்?” என்று நெஞ்சுத் தழுதழுக்கக் கூறினார்.

ஞானம் சிரித்தாள். “நீங்க இப்படிச் சொல்வீங்கன்னு எனக்குத் தெரியும். குருக்கள் வீட்டுப் பெண்கள் பவுடர் பூசிக்கொண்டு நாகரிகப் புடைவை உடுத்தும் போதும் குருக்கள் மட்டும் மாறக்கூடாதா. சந்துரு கூடச் சொல்கிறார் குருக்கள் இப்பவெல்லாம் கிராப் வெச்சுண்டு தட்டுச்சுத்து கட்டிண்டுதான் இருக்காளாம்” என்றாள்.

சந்துரு – சந்துரு... இவளுக்கு என்ன சந்துருப் பைத்தியமாகிவிட்டதே. இவள் மனசையே அவன் கலைத்து விடுவான் போலிருக்கிறதே. வெளியே எல்லாரும் சொல்வது சரியாகப் போய்விட்டது. நான் செய்த பிசகுக்கு அனுபவித்துதான் ஆகணும். பஞ்சையும், நெருப்பையும் ஒண்ணாக வைத்தால் பரவாயில்லை என்று நினைத்துவிட்டேன். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் இவளை மாற்ற வேண்டும் என்று எண்ணினார் குமாரசாமி.

நாள்தோறும் பலருக்காக அர்ச்சனை ஆராதனை செய்யும் அம்பாளை அவர் மட்டும் பிரார்த்திக்காமல் இருப்பாரா.

## அப்படியா

புதிதாகப் பிறந்த பட்டுப்புழுக்கள் மிகச் சிறியவை. ஏழு லட்சம் புழுக்கள் சேர்ந்தால்தான் ஒரு பவுண்டு நிறை இருக்கும். ஆனால் ஆறு வாரங்களுக்குள்ளே அவை 9500 பவுண்டு கனமுள்ளதாகி விடும். என்ன அசு வளர்ச்சி!

## 7

தன் கணவர் பதில் பேசாமலிருப்பதைக் கண்ட ஞானம், 'நீங்கள் கிராப்பு வெட்டிண்டு; பவுடர் போட்டுண்டு டெர்லின் போட்டுண்டாதான் எனக்கு நிம்மதி' என்று சற்று அழுத்தம் திருத்தமாகக் கூறினாள். குமாரசாமி பதில் பேசவில்லை. தூங்கத் தொடங்கிவிட்டது போல் குறட்டைவிட ஆரம்பித்துவிட்டார்.

ஞானத்திற்குத் தூக்கம் வரவில்லை. அன்று பார்த்த சினிமாவிலே கதாநாயகன் பாடும் பாட்டு அவள் செவிகளில் வட்டமிட்டது.

"பட்டணத்துச் சிங்காரன்... பார்வையிலே ஒய்யாரன் பார்த்துப் பார்த்து என்றுமே மகிழுவேன் ஆ...ஆ..."

இன்னொரு தடவை அந்தப் பாடலைக் கேட்க வேண்டும் போலிருந்தது.

அதிகாலையில் எழுந்தவுடன் குமாரசாமியும் வெளியே போய்விட்டார். சந்துருவும் அவசரம் அவசரமாகப் போய் விட்டான். ஞானத்திற்கு ஏனோ வேலையே ஓடவில்லை. குளிப்பதற்காக மாற்றுப் புடவையைச் சுற்றிக் கொண்டவள் அப்படியே பாட்டுப்

### அனப்லெப்ஸ் மீனுக்கு கண்கள் நான்கு

தென் அமெரிக்க கடலோரத்தில் காணப்படும் அனப்லெப்ஸ் என்ற மீனுக்கு நான்கு கண்கள் உள்ளன. மேலே உள்ள இரு கண்களும் நீர் மட்டத்துக்கு மேல் உள்ளதைப் பார்க்கவும், கீழே உள்ள இரு கண்கள் நீருக்குள் பார்க்கவும் பயன்படுகின்றன. இரு ஜோடிக் கண்களையும் ஏக காலத்தில் உபயோகித்து நீர் மட்டத்திற்கு மேலும், கீழும் அதனால் பார்க்க முடியும்.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி

புத்தகத்தை வைத்துக் கொண்டு ஊஞ்சலில் அமர்ந்தாள்.

யாரோ வரும் ஓசை கேட்டது. சந்துரு வந்தான். அவன் வருவதை அறிவிக்கக் கும்மென்று வாசனை வந்தது. 'ஹும்' என்று பெருமூச்சுவிட்டாள் ஞானம்.

சந்துருவின் கையில் பெரிய பொட்டலம் இருந்தது. சிறு குழந்தைபோல் ஞானம் அதை அவனிடமிருந்துப் பறித்து பரபரவென்ற ஆவல் மிகுதியால் பிரித்துப் பார்த்தாள் 'ஆ! விலையுயர்ந்த பவுடர்; சந்தன சோப்பு... ஹாஹ்ஹா! இது என்ன பொட்டலம்; ஆ! பால்டாபி!' டக்கென்று ஒன்றை எடுத்து தன் வாயில் போட்டுக் கொண்டவள்,

"ரொம்ப செலவாயிருக்குமே! அவர் இந்த மாதம் வாங்க வசதியில்லை என்றுவிட்டார். இந்த ஊரில் குருக்களுக்கு என்ன வருமானம். உங்களைப்போல் முதல் தேதி பிறந்தா சம்பளமா? நான் இதற்கு என்ன காசு கொடுக்க வேண்டும்" என்று ஞானம் குழைந்தாள், பவுடர் டின்னைத் திறந்து முகர்ந்தவாறே.

"நீ ஒன்றும் கொடுக்க வேண்டாம்."

"அப்படியென்றால் அவரிடமிருந்தே வாங்கிக் கொள்கிறீர்களா" என்று ஞானம் சாக்லெட் பொட்டலத்தை அவிழ்த்து அதிலிருந்து இன்னும் இரண்டு டாபிகளை எடுத்து ஒன்றைத் தன் வாயில் போட்டுக் கொண்டு மற்றொன்றை சந்துரு எதிர்பாராத விதமாக

## முதல் பயணிகள் ரெயில்

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ரிச்சர்டு டிரெவித்தில் என்பவர் 1804-ம் ஆண்டே நீராவித் தொடர் வண்டி ஒன்றை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இதுதான் மணிக்கு 8 கிலோமீட்டர் வேகத்தில் ஓடியது.

இதற்கு பிறகுதான் ஜார்ஜ் ஸ்டீவன்சன்னின் 1815-ம் ஆண்டு அறிமுகமானது. அப்போது அதன் வேகம் என்ன தெரியுமா?

அவன் வாய்க்குள் திணித்து,

"அவரிடம் இப்போ காசு கேட்காதீர்கள். அவர் கோபமாக இருக்கிறார்" என்றாள்.

சந்துருவின் இதயத்தில் இதுவரை மறைந்திருந்த அசுர எண்ணம் திடீரென்று பொங்கியது. அவன் அவளையே விழுங்கி விடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான். சந்தண சோப்பின் மீது சுற்றப்பட்ட மெல்லிய டிரேசிங் பேப்பர் நினைவு அவனுக்கு.

"நான் அவரையும் கேட்கமாட்டேன் உன்னையும் கேட்கமாட்டேன். ஆனால் உன்னிடமிருந்தே வாங்கிக் கொள்வேன்" என்றான்.

"அப்படியென்றால்?" என்று கன்னங்குழியச் சிரித்தாள் ஞானம்.

"அப்படியென்றால் இப்படித்தான் என்று ஒரு கணத்தில் அவளைத் தன் இருகரங்களாலும் இழுத்து அவள் எதிர்பாராத வண்ணம் அணைத்துக் கொண்டான். அவளுடைய உடல் நடுக்கத்திலும் ஒரு வெறி கிளர்ந்தது.

ஞானம் திடுக் கிட்டுவிட்டாள். பசும்புல் என்று சென்ற இடத்தில் வலையில் கால் சிக்கிக் கொண்ட மான் போன்ற நிலை. அவள் கையிலிருந்த சாக்லெட்டுகள் கூடத்தில் சிதறின. பவுடர் டப்பா, கடகடவென்று உருண்டோடியது.


"சீ!" என்று கர்ஜித்தாளே பார்க்கலாம்! ஆடை குலைவுற்ற

மணிக்கு 25கிலோ மீட்டர் ஆகும்.

## இப்படியும் ஒரு மீன்

நீர்க்குதிரை என்பது மீன் வகையைச் சேர்ந்தது. குதிரைத் தலை, புறா மார்பு, குரங்கு வால் கொண்டது. உடலின் நிறம் பச்சோந்தியைப் போல சூழ்நிலைக்கேற்ப மாறக்கூடியது.

- முக்கிமலை நஞ்சன், நீலகிரி



**மௌ**லானா அப்துல்கலாம் ஆசாத் (11-11-1888- 22-2-1958) முதல் மத்திய கல்வி அமைச்சர் ஆவார். சுதந்திரப் போராட்ட வீரரும், சிறந்த கல்வியாளருமான இவரது பிறந்த நாள் தேசீய கல்விநாளாகக் கொண்டாடப்படுகிறது.

- க.ரவீந்திரன்

அவளுக்கென்ன பைத்தியமா? இதுவரையில் அவள் தன்னுடன் பழகியதெல்லாம் மாயமா? சினிமாவுக்கு உடன் வந்ததெல்லாம் பொய்யா, அன்று தன் கரத்தைப் பிடித்துத் தன் உடல் உராய சாக்லெட்டை எடுத்துக் கொண்டது மாயாஜாலமா? இப்போது ஒரு கணம் முன்பு என் வாயில் ஒரு சாக்லெட்டை நான் எதிர்பாராத வகையில் போட்டாளே, அது என் எண்ணத்தைப் புரிந்து கொண்டு போட்டதில்லையா? என் அழகை வர்ணித்தாளே, அழகுக்கு ஏற்ற எனது

பாஞ்சாலிபோல் ஊஞ்சலின் மறுபுறம் சென்றுவிட்ட அவளை நோக்கிச் சந்துரு செய்வதறியாது நின்றான்.

"சந்துரு என்ன இது?" என்று கூவினாள் ஞானம்.

"ஏன்... ஏன்... என்ன...?" என்று தடுமாறினான் சந்துரு.

"என்னை என்ன நினைத்துக் கொண்டாய். போ வெளியே" என்று அடிப்பட்ட புலியாய்ச் சீறினாள்.

சந்தன நிறத்தைப் புகழ்ந்தாளே – என் ஆடை அலங்காரத்தை உயர்வாகக் கூறினாளே! என்னைத் தன் கணவரோடு ஒப்பிட்டு நோக்கிப் பேசிப் புகழ்ந்தாளே அதெல்லாம் பொய்யா?

சந்துரு திக்பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்தான்.

“இங்கிருந்து போகிறாயா இல்லையா?” என்று மீண்டும் ஞானம் சீறினாள்.

அவன் போனான். ரேழிக் கதவுக்கருகே நின்றிருந்த குமாரசாமி அதற்கு முன்பே போய்விட்டார். சந்துருவின் வாயில் சாக்லெட்டைப் போட்ட காட்சியை அவர் கண்ட உடனேயே அவர் போய்விட்டார். அவர் உடல் குன்றிவிட்டது. தன்னால் ஏற்பட்ட இந்த வினையைத் தானேதான் அறுக்கவேண்டும்?

ஞானம் அவசர அவசரமாக வெளியே ஓடிவந்தாள் – ஐயோ இந்தப் பாவி செய்ய முனைந்த காரியத்தை வேறு யாராவது பார்த்திருக்கப் போகிறார்கள் என்ற பய உணர்ச்சியுடன் அவமான உணர்ச்சியுடன் வந்தவள், அவர் – தன் கணவர் போய்க் கொண்டிருப்பதைக் கண்டவுடன் அவளுக்கே தான் நிரபராதி என்பதைத் தன் கணவரிடம் தெரிவிக்க ஆனால் குமாரசாமி திரும்பிப் பார்க்காமல் போய்க் கொண்டிருந்தார்.

## 8

**கோ**யிலில் யாகசாலை மண்டபத்துக்கருகே உட்காந்திருப் பவரிடம் கந்தசாமி படையாச்சி ஓடோடி வந்து, “ஓடிவாங்க ஓடிவாங்க வீட்டிலே குருக்கள் வீட்டு அம்மா என்னவோபோல் கிடக்கறாங்க. குருக்கள் ஐயாவும் காணவில்லை”

என்று அலறினான்.

ஞானம் மயங்கிய நிலையில் கிடந்தாள்.

மானம் பெரிதெனக் கருதி அவள் விஷம் உண்டுவிட்டாள்.

தான் சந்துருவுடன் இவ்வளவுநாள் பழகியதை அவன் தவறாக நினைத்து அத்துமீறிவிட்டதற்குத் தன் உயிரைப் போக்கிக் கொள்ள விரும்பினாள்.

# 9

அவர் மீண்டும் திரும்பி வராமல் போய்விடவில்லை. பத்து வருடங்கள் கழித்து மீண்டும் அதே ஊருக்குத் திரும்பி வந்தார். வடக்கே அவர் சுற்றாத இடமில்லை. பத்ரிநாத், கேதார்நாத் எல்லாம் போய்விட்டு உலகின் பல உண்மைகளை அறிந்து கொண்டார். தன் மனைவியிடம் சொல்லிக் கொள்ளாமல் அவளை நிர்க்கதியாய் விட்டுவிட்டு வந்ததற்காக வருந்தினார். திரிவேணி சங்கமத்தில் நீராடிவிட்டு நேரே தேவிபுரம் வந்து சேர்ந்தார்.

பத்து வருடங்களுக்குப் பிறகு ஊர் ரொம்பவும் முன்னேறியிருக்கும் என நினைத்தார். ஆனால், முன்னுக்கு இப்போது ஷீணித்துதான் இருந் தது. கோயிலிலே விளக்கைக் காணோம். கோபுரவாசல் கதவும் சாத்தப்பட்டிருந்தது.

குமாரசாமியைப் பார்ப்பவர்கள் அவரை அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது. தாடியும் மீசையுமாக அவர் தேசாந்திரியைப் போல் காட்சியளித்தார்.

கோயிலருகே இருந்த மூன்றாவது வீட்டுத் திண்ணையில் வந்தமர்ந் தார். அந்த வீட்டில் யாரோ குடித்தனமிருந் தார்கள். சாப்பிட்டுவிட்டு இலைளை எறிய யாரோ வெளியே வந்தார்கள். மங்கிய வெளிச்சத்தில் அடையாளம் தெரிய வில்லை.

"அம்மா!" என்றழைத் தார் அவர். அவருக்கு அப்போது பசி.

"யாரப்பா?" என்ற கனிவான குரல்.

"இந்த வீட்டில் குமாரசாமிக் குருக்கள் என்று ஒருவர் இருந்தாரே அவர் இப்போது எங்கேயிருக்கார்!"

"குமாரசாமிக் குருக்களா? எனக்குத் தெரியாது. இந்தக் கோயிலுக்குக் குருக்களே எனக்குத் தெரிந்து இல்லை. அடுத்த ஊரிலிருந்துதான் வந்து பூஜை செய்து விட்டுப் போகிறார்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றவள் மீண்டும் திரும்பி வந்து,

"குமாரசாமி குருக்கள்னு ஒருத்தர் இங்கே குடியிருந்தாராம். அதோ அந்த மாடி யறையில் ஓர் அம்மாளும் பொண்ணும் இருக்கிறார்கள். போய்க் கேளுங்கள்" என்றாள்.

அந்த வீட்டில் ஐந்தாறு குடித்தனம் இருக்கிறார்கள் போலிருக்கிறது.

படியேறி குமாரசாமி மாடிக்குப்


அடுத்த சிமிழ்

**விமலாரமணி**

எழுதிய

## ஆசையில் ஓர் கடிதம்

உங்கள் இதயத்தில் இடம்பிடிக்கும் உன்னதமான குடும்ப நாவல்.


'கிளிக் 3' படத்தில்

போய்ச் சேர்ந்தார். குறுகலான அறையின் வாசற்படி அருகே ஒரு பெண் சிம்மணி விளக்கு அருகே உட்கார்ந்து எதோ தோத்திரப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

"ஞானம்" என்று மெல்ல அழைத்தார் குமாரசாமி. அவரை அடையாளம் தெரிந்து கொள்ள அவள் திணறினாள். ஆனால் அவளை அவர் அந்த நிலையிலும் அடையாளம் தெரிந்து கொண்டுவிட்டார்.

விஷம் அருந்தி உயிர்போகும் நிலையில் இருந்த ஞானத்தை ஊர் நாட்டு வைத்தியர் உயிர்ப்பித்துவிட்டார். அவளுக்குப் பாம்பு கடித்துவிட்டது என்றே எல்லோரும் நம்பினர். ஆனால் அவள் குடித்த விஷமும், அதற்குக் கொடுத்த மாற்று மருந்தும் அவள்

உடலைச் சீர்குலைத்தன. பல்லெல்லாம் ஆட்டம் கண்டது. தலைமயிர் உதிர்ந்தது. மஞ்சள் நிற மேனி கறுத்தது.

தன் கணவர் வருவார், வருவார் என அவள் காத்திருந்தாள். துணைக்கு ஊரிலிருந்து அவள் தாயாரும் வந்து சேர்ந்தாள். எப்படியோ அவர்கள் அந்த ஊரிலேயே காலத்தை ஓட்டி வந்தார்கள்.

“நான்தான் ஞானம்.” என்று குமாரசாமி போர்த் திருந்த போர்வையை விலக்கினார்.

“நீங்களா?” என்று கூவிய ஞானம் கண்ணீர் பெருக அவர் காலடியில் சாய்ந்தாள்.

“நான் நிரபராதி. சந்தேகம் உண்டாகும் வகையில் நான் நடந்ததற்குத் தண்டனை அனுபவித்துவிட்டேன். எது அழகு என்பது தெரியாமல் மாயையில் சிக்கினேன். உங்கள் கரிய நிறத்தையும், குடுமியையும் வெறுத்தேன். ஆனால் வழிதவறிவிடவில்லை. இப்போது ஆண்டவன் என் அழகைக் குலைத்து நிறத்தையும் மாற்றிவிட்டான். என்னை இந்த நேரத்தில் ஏற்பீர்களா?” என்று விம்மினாள்.

அவளைத் தூக்கி நிறுத்திய குமாரசாமி, “அடி, பைத்தியமே! அழகுக்கு நிறம் ஏதடி? நான் தினமும் இந்த ஊர் கோயிலில் பூஜை செய்து கொண்டிருந்தேனே ஞானம்பிகை, அந்த மூலவர் ஞானம்பிகையின் நிறம் என்ன சிவப்பா? கறுப்புத்தானே? அந்த அம்பிகையை அழகின் சொரூபம் என்று எல்லாரும் புகழவில்லையா? அழகு என்பது இதோ இங்கிருக்க வேண்டும்” என்று இதயத்தைச் சுட்டிக் காட்டினார்.

அந்த இதயத்தின் மீது தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள் ஞானம்.

**(முற்றும்)**